Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 24 (10.10.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 10

மொறாயல் மூக்குக் கண்ணாடி அகம்

இல : 546, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 7893

பல் கட்டுவதற்கும்

பற்களுக்கு கிளிப்போடுவதற்கும்

இலவச கண்பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

# ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 4 ஆண்டுகளுக்கு நீடிக்க முயற்சி



## அரசியலமைப்பை திருத்தப்போவதாக கூறுகிறார் பிரதமர் மஹிந்த!

(கொழும்பு)

தற்போதைய அரசியலமைப்பை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலத்தை இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு நீடிப்பது குறித்தும் முயற்சிகள் எடுக்கப்படுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தமது அரசாங்கத்தின் செயற்பாடுகள், அரசியலமைப்பு மாற்றம் மற்றும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடர்பாக வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்திப்பு

(கொழும்பு)

சுவிற்சர்லாந்து நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் மிக்கெலின் கல்மிறே அம்மையார் நேற்றுமாலை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச்சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இரு தரப்பினரையும் வலி

## ஒஸ்ரிய அரச அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு!



Noolaham Foundation.
noolaham.org

தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்ரிய அரச அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகள் சந்திப்பு!





(வியன்னா)

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஒஸ்ரியாவின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஒஸ்ரியாவின் தலைநகரான வியன்னாவிலுள்ள வெளிவிவகார அமைச்சின் கட்டடத்தில் அந்த நாட்டின் அபிவிருத்தி, ஒத்துழைப்பு மற்றும் வெளிநாட்டலுவல்களுக்கான சமஷ்டி அமைச்சின் பணிப்பாளர் ஜோர்ச்லென் நிக்ஸினை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்து உரையாடினர்.

இந்தச்சந்திப்பின்போது - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானப் பேச்சுக்களில் எட்டப்பட வேண்டுமென்பதில் ஒஸ்ரிய அரசு அக்கறையாக இருப்பதாகவும் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை உரிய திசையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்திப்பு

(கொழும்பு)

சுவிற்சர்லாந்து நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் மிக்கெலின் கல்மிறே அம்மையார் நேற்றுமாலை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச்சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இரு தரப்பினரையும் வலியுறுத்தும் நோக்குடன் இவர் நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்தார்.

நேற்று மாலை வெளிவிவகார அமைச்சர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கம் பதில் யோசனையை புலிகளிடம் சமர்ப்பிக்க முடிவு!

### நோர்வேயின் உதவியை நாடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பேரில் - அரசாங்கத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள் அடங்கிய அறிக்கை, நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

சமாதானப் பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய விடுதலைப் புலிகளால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்களின் ஆளுமையை விரிவாக்க எழுச்சிநாளில் பிரகடனம் செய்வோம்!

### மகளிர் அரசியற்துறை அறிக்கை

(கிளிநொச்சி)

"தமிழ்ச்சமூகம் பழமைவாத இருட்டுலகிலிருந்து வெளியேறி, தன்னம்பிக்கையுடன் தனித்துத் தீர்மானம் எடுக்கும் ஆளுமை மிளிரவேண்டும். பெண்கள் - அறிவாற்றலை மேம்படுத்திக்கொள்வதுடன் அந்த ஆளுமையை சமூகத்திற்கு விரிவாக்கம் செய்வதற்கு தமிழீழ பெண்கள் எழுச்சி நாளில் அனைவரும் பிரகடனம் செய்வோம்."

இவ்வாறு இரண்டாம் லெப்.மாலதியின் நினைவுநாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளையும் முன்னிட்டு, தமிழீழ அரசியற்துறை மகளிர் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இன்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள். தமிழ் சமூகத்தின் சிந்தனையில் பெண் விடுதலை என்ற தீப்பொறியைப் பற்ற வைத்த 2 ஆம் லெப்.மாலதி என்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் போராளியைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடியவர் சூட்டுக்குப் பலி!

(மட்டக்களப்பு)

அம்பாறை - அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பியோடிய கருணா குழுவைச் சேர்ந்த ஒருவரை விசேட அதிரடிப்படையினர் சுட்டுக்கொன்றனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளி ஜுட் நேற்று முற்பகல் 10.45 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் கொலையாளிகளில் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குறிப்பிட்ட சம்பவத்தின்போது, விடுதலைப் புலிப் போராளி பயணம் செய்யவிருந்த தனியார் வாகனத்தின் சாரதியான எஸ்.நாகேஸ்வரன் (வயது 29) என்ப (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இலக்கிய விழா கோலாகலமாக ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு நடாத்தும் மூன்றுநாள் தமிழ்இலக்கிய விழாவின் முதல்நாள் நிகழ்வுகள் - நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகின.

நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமான இந்நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் நிகழ்ச்சி மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து முதல்நாள் ஆய்வரங்கினை கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பீட தலைவர் கலாநிதி சி.மௌனகுரு, கோகிலா மகேந்திரன், இந்துமகளிர் கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராசா, யாழ்.கல்வி வலயப்பணிப்பாளர் விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் இருதயநாதன், கலாநிதி மனோன்மணிசண்முகதாஸ், மாகாணகல்வியமைச்சினைச் சேர்ந்த மகாலிங்கம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து ஈழத்து இலக்கிய நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் ஆரம்பித்து வைக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை

# தேசிய சாரணர் வாரம் இன்றுமுதல் ஆரம்பம்

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்ட கிளைச் சங்கத்தினரால் தேசிய சாரணர் வாரம் இன்று முதல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டிப் பருத்தித்துறை பாடசாலைகளுக்கிடையிலான சைக்கிள் ஓட்டப்போட்டி இன்று காலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தினரால் சாரணர் அணிதிரள்வு - 2004 எனும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 15ஆம் திகதி வடமராட்சி பிரதேச சாரணர் கிளைச் சங்கத் தலைவர் வசந்தகுமார் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் மாலை 2.00 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக முன்னாள் பருத்தித்துறை சாரணர் கிளைச் சங்கத் தலைவரும் மேலதிக அரசாங்க அதிபருமான ஆ.சிவசுவாமி கலந்து கொள்வார்.

இறுதி நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. அருளானந்தம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலக அதிகாரி எஸ்.சிவஞானசுந்தரம் கலந்து கொள்வார்.

# சர்வதேச அஞ்சல் தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அஞ்சல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச அஞ்சல்தின நிகழ்வு நேற்று மாலை பிராந்திய அஞ்சல் திணைக்கள பொதுமண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் ஆரம்பமாகிய இந்தநிகழ்வில் - மக்கள் வங்கியின் வடபகுதி பிராந்திய உதவி முகாமையாளர் இளம்பிறைநாதன் பிரதமவிருந்தினராககவும், தபாலக நுண்ஆய்வுப்பரிசோதகர் எஸ்.ஜெயரட்ணம், பிராந்திய கணக்காளர் திருமதி கலைச்செல்வன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். வடபிராந்திய அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரத்தினமும்





கலந்து கொண்டார்.

விழாவின் இறுதியில், உலக அஞ்சல் தினத்தினையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கான பரிசுகளை வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர், மக்கள் வங்கியின் வடபகுதி பிராந்திய உதவி முகாமையாளர், தபாலக நுண்ஆய்வுப்பரிசோதகர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வின்போது - அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களோடு, அஞ்சல் அலுவலக ஆலோசனைக்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# உதயசூரியன் சனசமூக நிலையம் விஷமிகளால் தீக்கிரை!

(கோண்டாவில்)

இணுவில் கரைக்கால் பகுதியில் உள்ள சனசமூக நிலையம் விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டு தளபாடங்களும் எரியூட்டப்பட்டன.

நேற்றுக் காலை ஆட்டோ ஒன்றில் வந்த விஷமிகள் இந்தச் செயயில் ஈடுபட்டதாக தெரியவருகிறது.

இந்தச்சம்பவத்தின் போதே இணுவில் காரைக்கால் உதயசூரியன் சனசமூக நிலையத்தின் பெயர் பலகையும், மேசை, வாங்குகளும் அடித்து நெருக்கப்பட்டதுடன் மற்றும் பத்திரிகைகளும் எரியூட்டப்பட்டன.

கடந்த புதனன்று இடம்பெற்ற கோஷ்டிமோதலின் எதிரொலியாகவே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. மேற்படி சம்பவத்தின்போது ஆட்டோக்களில் வந்தவர்களால் இன்னும் தொடரும் என்ற கோஷங்களும் எழுப்பப்பட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (82)

# விபத்தில் இளைஞர் படுகாயம்!

மோட்டார் சைக்கிளில் வந்தவர், விபத்துக்குள்ளாக நேரிடுமென எண்ணி, முன்னால் மூன்று சைக்கிள்களில் வந்த மாணவிகளை தப்பவைக்க எடுத்த முயற்சியின் போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

நேற்றுமுன்தினம் காலை கொட்டடி - வைத்தியசாலை வீதியில் இந்தச்சம்பவம் நடைபெற்றது. நாவாந்துறையைச்சேர்ந்த சின்னையா வெள்ளிலிங்கம் (வயது 28) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (206)

# முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு விழா

சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளிச்சிறுவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2.30மணிக்கு சரசாலை மத்தி இராமாவில் பிள்ளையார் ஆலய முன்றலில் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவஸ்ரீ இராசேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

இந்தநிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் தஸ்ரீஸ்கந்தராசாவும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், சுகாதார உத்தியோகத்தர் சிவனேசகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (24)

# லயன்ஸ் கழகத்தின் இரத்ததான முகாம்!

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் நேற்றையதினம் இரத்ததான முகாம் ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் ஓ.எல்.ஆர் தேவாலயத்தின் அருகில் உள்ள மைதானத்தில் இடம்பெற்ற இந்த மருத்துவமுகாமில் பெருந்தொகையான மக்களும், நூற்றுக்கணக்கான படையினரும் கலந்து கொண்டு தமது இரத்தத்தினை தானமாக வழங்கினர்.

இங்கு எடுக்கப்படும் இரத்தவகைகள் அனைத்தும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர்.

## மாலதியின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி தின நிகழ்வும் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு தமிழ் மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.


நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் - இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

ஸ்ரீகாந்த் சினேகா கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

போஸ்



காட்சி நேரம்:11.00,3.00,7.00,10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், மஞ்சுளா, நாகேஸ் நடித்த

ரிக்ஷாக்காரன்

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

அடுத்த வெளியீடு மதுர

(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.

10 ஆம் திகதிவரை



அர்ஜுன், சாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

காட்சிநேரம் 10.30,2.30, 6.30 (பு.நே)

அரசாட்சி

11 முதல் திருடா திருடி

(சி-2725)

சிறு விளம்பரம்

முகமதி கிறைண்டிங் மில்

நெல், நல்லெண்ணெய் வேப்பெண்ணை, விளக்கெண்ணெய், ஒலிவ் வெண்ணெய் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C/3022)


# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## நல்லூர் - செங்குந்தா பொதுச்சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2004

மாநகரசபைக்குசொந்தமான நல்லூர்-செங்குந்தா பொதுச்சந்தையில் புதிதாக சபையால் அமைக்கப்பட்டுள்ள கடைகளை இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் - யாழ்.மாநரக ஆணையாளராகிய என்னால் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பணைப் பணம் ரூபா 10000/=, மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 1000/= உம் பெறுமதிசேர் வரி (Vat) ரூபா 150/= (15%)உம் செலுத்துவதன் பெயரில் 21.10.2004 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 12.00 மணிவரையும் மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான விண்ணப்பப் படிவங்களில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் கேள்விப் பத்திரம் பெறவரும்போது, அவர்களுடைய தேசிய அடையாள அட்டையினைக் கொண்டுவருதல்வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்ட உறையிலிட்டு இடதுமேல் மூலையில் "நல்லூர்-செங்குந்தா பொதுச்சந்தைக் கடை குத்தகை" எனக் குறிப்பிட்டு 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 22.10.2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க முடியும். எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

தங்களால் கோரப்படும் கேள்விக்கு மேலதிகமாக 15% பெறுமதிசேர் வரியும் சேர்ந்து செலுத்தல் வேண்டும்.

| கடைகள் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர்வரி (Vat) தவிர்த்து) |
|---|---|
| 1. கீழ் தளக்கடைகள் (கடை ஒன்றுக்கு) | 360000/= |
| 2. முதலாம் மாடிக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180000/= |

ஆணையாளர்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி: 10.10.2004

(C-3253)


கூறுவிலை கோரல்

இலங்கை மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளர் வட மாகாண அலுவலகத்துக்கு கீழ்க்குறிப்பிடப்படும் வசதிகளுடைய ஓர் கட்டடம் வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

01. 8975 சதுர அடிக்குக் குறையாத கட்டட நில விஸ்தீரணம் உடையதாக இருத்தல் வேண்டும்.
02. யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
03. நீர் வசதியுடன் 50 பேர் உபயோகிக்கக்கூடிய மலசலகூட வசதி உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
04. சுமாராக 15 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
05. குறைந்தது 5 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளையுடைய கட்டட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளை கட்டட உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 2004.10.22 ஆந் திகதி காலை 10 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர்,
பி.பொ.மு.(வடக்கு) அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021-222 2496

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"

இலங்கைமின்சாரசபை

(C/3252)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிக்குள் வெடித்துள்ள உட்பூசலாலேயே
# ஸ்ரீ சுமங்கல தேரர் பதவி விலகினாராம்

(கொழும்பு)

பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சியான - ஜாதிக ஹெல உறுமயவுக்குள் வெடித்துள்ள உட்பூசல் காரணமாகவே அந்தக்கட்சியின் தேசிய அமைப்பாளர் வண. கொலன்னாவ ஸ்ரீ சுமங்கல தேரர் நேற்றுமுன்தினம் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

நாடாளுமன்றம் கூடிய சபைக்கு சமூகமளிக்காத அவர் - சபை அமர்வு முடிந்த பின்பு, செயலாளர் நாயகத்திடம் தனது இராஜினாமா கடிதத்தைக் கையளித்தார்

கட்சியின் செயலாளரான வண. உடுவே தம்மாலோக்க தேரரிடம் இது பற்றி கேட்டபோது - கட்சிக்குள சில சில பிரச்சினைகள் இருந்தாலும், அதற்கும் தனது இராஜினாமாவுக்கும் தொடர்புகள் இல்லை. சில விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது, ஆனால், அதற்குப் போதிய கால அவகாசம் தேவை எனத் தெரிவித்தார்.

ஏற்கனவே சிஹல உறுமயவாக செயற்பட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சி, கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் 9 பௌத்த பிக்குகள் தெரிவாகியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கட்சிக்குள் தற்போது வெடித்துள்ள உட்பூசலுக்குக் காரணம் அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான சம்பிக்க ரணவக்க தான் என்ற குற்றச்சாட்டு ஒரு சாராரிடமிருந்து கிளம்பியுள்ளது.

குறிப்பிட்ட கட்சிகளின் ஸ்தாபகரான திலக் கருணாரத்ன தற்போது ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து, ஊவா - பரணகம தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட் டுள்ளார்.

இதேவேளை - கொலன்னாவை ஸ்ரீ சுமங்கல தேரர் தனது ராஜினாமாக் கடிதத்தைக் கையளித்ததை அடுத்து, இவரது இடத்துக்கு கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த நந்தாலோக தேரரின் பெயரைத் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (01,தே)

# கொலைகளுடன் தொடர்புடைய நால்வர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தைப் பிரதேசத்தில் இயங்கிவந்த முக்கிய பாதாளக் கோஷ்டி உறுப்பினர்கள் நால்வரை மாளிகாவத்தைப் பொலிஸார் கைது செய்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற பல படுகொலைகளுக்கும், இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார் - இவர்கள் நால்வரும் வயதால் குறைந்தவர்கள் எனத் தெரிவித்தனர்.

அண்மையில் மாளிகாவத்தைப் பகுதியில் 13 வயதுச் சிறுமி ஒருவர் கொலை செய்யப்பட்டது இவர்களாலேயே எனத் தெரிவித்த பொலிஸார் - இவர்களும் பல கொலைச் சம்பவங்களுக்குத் தொடர்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடம் இருபது கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கிகள் மற்றும் கத்திகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

# பொலனறுவ படுகொலையைக் கண்டித்து முஸ்லிம்கள் நேற்று முன்தினம் ஹர்த்தால்

(கொழும்பு)

பொலனறுவை மாவட்ட எல்லைப்புற கிராமங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்து, நேற்று முன்தினம் அந்த மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆசிரியர் உட்பட, இரண்டு முஸ்லிம்கள் எல்லைப்புற கிராமமான கட்டுவன்வில்லில் ஆயுதக் குழுவொன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அத்துடன், கடந்த வியாழக் கிழமையன்று இரவு, முத்துக்கல்லில் தமிழரொருவர் கடத்தப்பட்டு, சுட்டுக்கொலை செய்யப் பட்டார்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவதைக் கண்டித்து பொலனறுவை மாவட்டப் பள்ளிவாசல்களின் சம்மேளம் இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

இந்த ஹர்த்தாலால் நேற்று முன்தினம் கதுருவெல, தம்பானை, கல்லால உட்பட அந்த மாவட்டத்தின் சகல முஸ்லிம் பிரதேசங்களிலும் பாடசாலைகள் எதுவும் இயங்கவில்லை.

அத்துடன் - சந்தைகள், வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. வெள்ளைக் கொடிகளும், கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்ததுடன், போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப் பட்டிருந்தன.

அதேவேளை - கதுருவெல பள்ளிவாசலிருந்து ஒரு மைல் தூரத்துக்கு - வீதியில் இருமருங்கிலும் வரிசையில் நின்று அமைதிப்போராட்டம் ஒன்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர்.

எல்லைப் புறங்களில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். எல்லைப்புற கிராமங்களில் ஆயுதக்குழுக்களின் நடமாட்டம் தடைசெய்யப்படவேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# இணைந்த சேவை ஊழியர்களுக்கு ஜனவரியில் பதவி உயர்வு பரீட்சை

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்குப் பதவியுயர்வை வழங்க, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்கான எழுத்துமூலப் பரீட்சை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்பாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர், தட்டெழுத்தாளர்கள் ஆகியோருக்கே பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

குறித்த பதவிகளில் வகுப்பு 1 தரம் 'அ' வில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுக்கான பரீட்சைக்குத் தோற்றமுடியும். எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி விண்ணப்ப முடிவுத்திகதியாகும்.

## சீனா அரசாங்கத்தால்
# பொருளாதார ஒத்துழைப்புக்கென 500 மில்லியன் ரூபா உதவி!

(கொழும்பு)

சீனா - இலங்கை அரசாங்கத்துக்குப் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்காக 500 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

இந்த நிதியால், 50 மில்லியன் ரூபா - வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வரட்சி நிவாரணங்களை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் இலங்கை வந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான வூ குவான் செங் தலைமையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கை வந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின் போது, பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை - சீன தூதுக்குழுவினர் சபாநாயகர் உட்பட கட்சித் தலைவர்களையும் சந்தித்து உரையாடி -

அத்துடன், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் இவர்கள் சந்தித்து உரையாடி பேசினர்.

# ஊர்காவற் படையினரை விடுவிக்க; நாளை வரை கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுவிப்பதற்கான கால எல்லையை நாளை வரை நீடித்துள்ளதாக வட - கிழக்குப் பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திருகோணமலைக்குச் சென்றிருந்த அரசின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவை 22 ஆவது இராணுவ கட்டளைத் தலைமையகத்தில் சந்தித்தபோது, அந்த அமைப்பின் செயலாளர் அனுரா பண்டார தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துத்துள் ஊடுருவியவேளை, இந்த ஊர்காவற் படையினர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நாளைக்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (04)

# மாணிக்க சுரங்கம் இடிந்ததில் இரண்டு பேர் உயிரிழந்தனர்?

இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் மாணிக்கச் சுரங்கம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த ஒருவர் இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

30 அடி ஆழமான இந்தச் சுரங்கம் - நேற்று முன்தினம் பிற்பகல் இடிந்து வீழ்ந்ததில், சுரங்கத் தொழிலாளர் இருவர் காணாமற் போயுள்ளனர்.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரது உதவியுடன் உயிரிழந்தோரின் சடலங்களைத் தேடிவருகின்ற போதும், இதுவரையில் மீட்கப்படவில்லை.

# அரசு - எதிர்க்கட்சி உடன்பாட்டுக்கு இந்திய அரசு கடும் பிரயத்தனம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்காக அரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே உடன்பாடொன்றைக் கொண்டுவருவதற்கு இந்திய அரசு மீண்டும் முயன்று வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தியா மேற்கொள்ளும் இந்த முயற்சியின் ஒரு கட்டமாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

இதேவேளை - இவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு - ஜனாதிபதி சந்திரிகாவையும், ரணிலையும் இந்தியாவுக்கு வரும்படி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று புதுடெல்கிக்குச் செல்லவுள்ளார்.

இதேவேளை - இந்தப் பயணத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவும் பங்கேற்கவுள்ளார்.

இந்தியாவுக்குச் செல்லும் ரணில் விக்கிரமசிங்க - அங்கு ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, வெளிநாட்டு அமைச்சர் நட்வர் சிங், முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் கருணாநிதி ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை - அடுத்தமாதம் இரண்டாவது வாரமளவில் இந்தியாவுக்குச் செல்லவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இவர்களைச் சந்திக்கவுள்ளார். (தே)

# அடுத்த தேர்தலுக்கு ஐ.தே.கட்சி தயாராகிறது

அடுத்தவருடம் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயத்தமாவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் சபை தீர்மானித்திருப்பதாக, சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் முடிவடைவதை அடுத்து, ஜனாதிபதி தேர்தலை நடத்தப்படவேண்டும் என, ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். எந்தக் காரணத்தைக் கொண்டும், ஜனாதிபதி தேர்தலை ஒத்திப் போடுவதற்கு ஐ.தே.கட்சி உடன்படாது. எனவே, இதன்படி ஜனாதிபதி தேர்தலை இலக்குவைத்து, எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று ஐ.தே.கட்சியின் சம்மேளனத்தை கூட்டுவதற்கும் இதற்காக விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுன்னது. (தே)

# அரச ஊழியர்களுக்கு மேலும் பல சலுகைகள்

அடுத்த நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் - அரச ஊழியர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்போடு, அவர்களை ஊக்குவிப்பதற்காக, மேலும் பல சலுகைகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்படி மூலம் அரச ஊழியர்களுக்கு சகாய விலையில் வீடுகள், காணிகளை வழங்குதல், பயிற்சிகளுக்கான விசேட புலமைப் பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தல், குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல் போன்ற சலுகைகள் வழங்கப்படவுள்ளன. (தே)

# ஐம்பது ஆயிரம் ஆசிரியர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோமென எச்சரிக்கை

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் பணியாற்றும் சுமார் 50 ஆயிரம் ஆசிரியர்களை இணைத்து, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக - [illegible] கள் எச்சரித்துள்ளனர்.

தமது பிரச்சனைகள் தொடர்பில் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் பட்சத்தில் - இந்தப் போராட்டத்தைத் தாம் நடத்தவுள்ளதாகவும்,

இரண்டு வார கால அவகாசத்தைத் தாம் அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளததாகக் கூறிய இந்த பிரதிநிதிகள் குறிப்பிட்ட இந்தக் காலப்பகுதிக்குள் தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

சம்பள அதிகரிப்பு தொடர்பான ஏற்பாடுகள் முழுமை பெறும் வரைக்குமான இடைக்கால கொடுப்பனவாக மாதம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்ட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(01,தே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயை 7 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது இலங்கை அணி!

(ராவல்பிண்டி)

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் முக்கோண ஒரு நாள் தொடரில் நேற்று ராவல்பிண்டியில் இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடந்த போட்டியில் இலங்கை ஏழு விக்கெட்டுக்களால் சிம்பாப்வேயைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால், சிம்பாப்வே அணி துடுப்பெடுத்தாடியது.

இலங்கைப் பந்து வீச்சாளர்களின் பந்துகளுக்கு முகங்கொடுக்கமுடியாத நிலையில் சிம்பாப்வேயின் விக்கெட்டுக்கள் மளமளவென விழுந்தன. இதனால் அவ் அணியில் மற்சிகென்யரி 37, இப்ராகிம் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றதைத் தவிர மற்றயவர்கள் அனைவரும் ஏழுக்கு குறைந்த ஓட்டங்களையே பெற்றனர்.

இறுதியில் அவ்வணி 33 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் இலங்கை அணி 16 உதிரி ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்தது.

பந்துவீச்சில் உபுல் சந்தன 3, வாஸ், ம.ஃறூப் மற்றும் பெர்னாண்டோ மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் சொய்சா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 105 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகச் சிறிய இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இதில் சனத் 40, ஜயந்த 21, டில்ஷான் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பன்யன்காரா 1, சிக்கும்புரா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக ம.ஃறூப் தெரிவுசெய்யப்பட்டார்.









# அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தோல்வியின் விளிம்பில் இந்தியா



(பெங்களூர்)

அவுஸ்ரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தோல்வியைத் தழுவும் நிலையிலுள்ளது.

பெங்களூர் டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 127 என்ற நிலையில் இருந்து தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்தது.

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்களுக்கு இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் மிகப்பெரும் சவாலாக இருந்தார்.

ஆடுகளத்துக்கு வந்த அவுஸ்ரேலிய வீரர்களை பவிலியனுக்கு திருப்பி அனுப்புவதிலேயே அவர் குறியாக இருந்தார்.

கிளார்க் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல, கில்கிறிஸ்ட் களமிறங்கினார். ஓரளவுக்கு நிலைத்துநின்றாடி 45 ஓட்டங்களைப் பெற்ற மார்ட்டின் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் கில்கிறிஸ்டாலும் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. கும்ளே வீசிய பந்தில் 26 ஓட்டங்களிலேயே அவர் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார்.

பின்னர் ஷேன் வோண் 37 ஓட்டங்களை எடுத்துக்கொடுத்தபோதும் ஹர்பஜன் சிங்கின் சுழற்பந்து வீச்சுக்கு அவரும் விக்கெட்டை இழக்க அடுத்து வந்த ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் ஆகியோர் தலா 8 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். ஆட்டநேர முடிவில் மக்ரா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இரண்டாவது இனிங்சில் ஹர்பஜன் சிங் 30.1 ஓவர்கள் பந்து வீசி 78 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். கும்ளே 2, பதான் 1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதையடுத்து 457 என்ற வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக் ஒரு ஓட்டத்தையும் பெறாமல் ஆட்டமிழந்துசென்றார். மக்ரா வீசிய பந்தில் அவர் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இந்திய அணி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இன்னொரு தொடக்க வீரர் சோப்ராவும் 5 ஓட்டங்களில் ஜிலெஸ்பியின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட் வீழ்ந்த பின்னர் களம் இறங்கிய ராவிட் நின்றுபிடித்து ஆடிக்கொண்டிருந்தபோதும் எதிர்முனையில் மூன்றாவது விக்கெட்டுக்கு ஜோடியாகச் சேர்ந்த கங்கூலி 5 ஓட்டங்களுடன் ரன்அவுட்டாகி மைதானத்தைவிட்டு வெளியேறினார்.





இதையடுத்து லக்ஸ்மன் பெரும் எதிர்பார்ப்புக்களை ரசிகர் மத்தியில் ஏற்படுத்தியவாறு களமிறங்கியபோதும் அவரால் 3 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. அவரது விக்கெட்டை ஷேன்வோன் எல்.பி.டபிள்யூ முறையில் கைப்பற்றினார். அதேவேளை, ராவிட்டுடன் சோடி சேர்ந்த யுவராஜ்சிங் ஓரளவுக்கு நிலைத்து நின்று ஆடி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார்.

எனினும் இந்திய அணி 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் யுவராஜ்சிங் 27 ஓட்டங்களுடன் மக்ராவின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களமிறங்கிய பார்த்திவ் பட்டேல் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஷேன்வோனின் பந்துவீச்சுக்கு எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். நேற்று நான்காம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது, இர்பான் பதான் 7 ஓட்டங்களுடன் ராவிட் 47 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த இந்திய அணி நெருக்கடியான கட்டத்தில் உள்ளது.

இன்று முழுநாளும் தாக்குப் பிடித்தால் மட்டுமே போட்டி சமநிலையில் முடியும். ஆனால், இந்திய அணி வீரரால் முழுநாளும் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க வாய்ப்பில்லை என்பதால் முதல் டெஸ்டில் இந்தியா தோல்வியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2 ஆம் லெப் மாலதியின் நினைவாக நடத்தப்படும் மாவட்டங்களுக்கிடையிலான மகளிர் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய வீராங்கனைகள் மாலதி படையணித் தளபதி கேணல் விதுஷா மற்றும் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதைக் காணலாம்.



### பாகிஸ்தானுடனான
## ஹொக்கி தொடரை இந்தியா இழந்தது

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் இடையிலான 8 போட்டிகள் கொண்ட ஹொக்கி தொடரை பாகிஸ்தான் அணி வென்றது.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் நட்பு முறையில் 8 போட்டிகள் கொண்ட ஹொக்கி தொடரில் மோதிவருகின்றன. பாகிஸ்தானில் நடந்து முடிந்த 4 போட்டிகளில் இந்தியா 1-2 என்ற அடிப்படையில் பின்தங்கியிருந்தது. தொடர்ந்து இந்தியாவில் 4 போட்டிகள் கொண்ட தொடர் தொடங்கியது. இதில் பாகிஸ்தான் அணி ஒரு வெற்றிபெற்றது. மற்றொரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. 6 போட்டிகள் முடிவில் பாகிஸ்தான் 3-1 என்ற புள்ளி அடிப்படையில் முன்னணி பெற்றது. 7 ஆவது ஆட்டம் சண்டிகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்திலேயே பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பாஸ் ஒரு கோல்போட்டு அணிக்கு முன்னிலை தேடிக்



கொடுத்தார். ஆட்டத்தின் 47 ஆவது நிமிடத்தில ரேகன்பட் பாகிஸ்தான் அணிக்கு 2 ஆவது கோலைப் போட்டு முன்னணி பெற்றுகொடுத்தார். பின்னர் விறுவிறுப்பாக ஆடிய இந்திய அணியில் அர்ஜுன்ஹலப்பா ஒருகோல் போட்டார். கடைசி நிமிடத்தில் இந்தியா அதிக உத்வேகத்துடன் ஆடியபோதும் எந்தபலனும் கிடைக்கவில்லை.

முடிவில் 2 - 1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இதன் மூலம் 8 போட்டிகள்கொண்ட தொடரில் பாகிஸதான் 4-1 என்ற கோல் கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தின ஆட்டத்தில் அப்பாஸ் புதிய சாதனை படைத்தார். 212 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ள அப்பாஸ் ஒட்டுமொத்தமாக 268 கோல்கள் அடித்து சர்வதேச அளவில் அதிக கோல் போட்ட வீரர் என்ற சாதனையை எட்டினார். சர்வதேச அளவில் 100 மற்றும் 200 கோல்களை மிகக்குறைந்த போட்டிகளில் எடுத்த சாதனையையும் அப்பாஸ் எட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் யாழ்.மாவட்ட ரீதியாக ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர். பங்குபற்ற விரும்பும் அணியினர் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுகொள்ளமுடியும். விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சர்வதேசத்தின் அழுத்தம் அவசியம்

## ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மகாசிவம்

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் முன்னெடுக்கப்பட்ட சமாதானத்துக்கான தீர்வு முயற்சிகள்- தென்னிலங்கையிலுள்ள கட்சிகளுக்கு இடையேயுள்ள அரசியல் போட்டி காரணமாகத் தாமதப்பட்டுக் கொண்டே போகின்றன.

இலங்கை இராணுவம் போருக்கான ஆயத்தங் களைச் செய்து, நவீன ஆயுதங்களைப் படைகளுக்குக் கொடுத்து, போருக்குத் தயார் நிலையிலுள்ளது.

போர் எந்தநேரமும் நடக்கலாம் என்ற பயம் - மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசு தமிழர்களுக்கு நீதியான தீர்வைக் கொடுக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடமில்லை.

எனவே, சர்வதேச சமூகம் இலங்கை மீது தனது அழுத்தத்தைப் பிரயோகிக்கவேண்டும் என, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

அண்மையில் பிரேஸிலில் நடைபெற்ற சர்வதேச கல்வித்திணைக் களத்தின் நான்காவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 15 வருடங்களாக 100 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இந்தப் பாடசாலைகள் மீண்டும் கல்வி நிர்வாகத்திடம் இரண்டு வருடத்துக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டிருக்கவேண்டும்.

100 பாடசாலைகளைத் திரும்பக் கொடுக்காத அரசு - தமிழர்களின் அரசியல் உரிமைகளைக் கொடுக்குமென, யாரும் எதிர்பார்க்க முடியாது. ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற சிவில் யுத்தத்தால், மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கைப் புனரமைக்க, தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் ஜனநாயக ரீதியில் கோரிய இடைக்காலத் தன்னாட்சி சபையை - தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவேண்டும்.

மேலும் கல்வியில் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சமவாய்ப்பில்லை.

பாடசாலைகளில் தமிழர்க ளின் சரித்திரமே மாற்றி எழுதப்பட்டிருக்கிறது.

பாடநூல்கள் சமகாலத்தில் வெளிவருவதில்லை. உரிய விதத்தில் சம்பளங்கள் வழங்கப்படுவதில்லை.

மக்களின் வீடுகளில் இராணுவத்தினர் 20 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர்.

அதனால் மக்கள் தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமங்களை, வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு நீண்டகாலமாக அகதி முகாம்களில் இருக்கிறார்கள்.

இந்த நிலையைச் சர்வதேச சமூகம் ஆழமாகப் பரிசீலித்து, தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (122)

யாழ். மத்திய கல்லூரியூடாக

# பரீட்சைக்குத் தோற்றுவோர் அதிபருடன் தொடர்பு கொள்க!

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியூடாக, முதற்தடவையாகத் தோற்றிய மாணவர்கள் இரண்டாம் தடவையாகவும், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு பாடசாலையூடாக தோற்ற விரும்பின் அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றாத எந்தவொருவரும் - பரீட்சைக்கு கல்லூரியூடாகத் தோற்றவோ, அதிபருடாக விண்ணப்பிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.

## *ஆன்மீக சொற்பொழிவு*

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் - பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில், இன்று காலை 11 மணிக்கு இரத்தினசபாபதிக் குருக்கள் திருமாறன் 'இராம என்னும் நாமம்' என்ற தலைப்பில் பேருரையாற்றவுள்ளார். (20)

## *விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன*

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் அடுத்த ஆண்டுக்கான - புதிய அனுமதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்பயிற்சி நெறிகள், வர்த்தகப் பயிற்சி நெறிகள், பொறியியல் துறைப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எட்டாம் தரம் சித்திபெற்றோர் மற்றும் க.பொ.த.சாதாரண சித்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் பயிற்சி நெறிகளுக்கான தெரிவுகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## *ஆண்டு நிறைவு விழா*

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள மெதடிஸ்த திருச்சபையின் பிரார்த்தனை மண்டபத்தின் 9 ஆம் ஆண்டு நிறைவுநாளும், நன்றி செலுத்தும் வழிபாடும் இன்று நடைபெறவுள்ளது.

அருட்திரு டி.அழகராசா சேகரக் குரு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகள் - இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறைவனின் ஆசீர்வாதத்தையும், அருளையும் பெற்றுய்யுமாறு இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் மு.எசேக்கியேல் அறிவித்தார். (12)

# நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள திணைக்களங்களின் அபிவிருத்தி செயற்பாடுகளை ஆராய்வதற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் - நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்த ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட திணைக் களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின்மூலம் பிரதேச ரீதியான திணைக்களங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆராய்ந்து, பல செயற்திட்டங்கள் வகுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட பல்கலை ஊழியர்களுக்கு சான்றிதழ்

யாழ்.குடாநாட்டில் தேர்தல் காலததில், கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக் கழக கல்வி சாரா ஊழியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த தேர்தலின்போது பவ்ரல் அமைப்பினரின் ஏற்பாட்டிலேயே யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இவர்களுக்கு தேர்தல் காலத்தில் சிறப்பாகவும், சுறுசுறுப்பாகவும் கடமையாற்றியமைக்காகவே இந்தச் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

தேர்தல் காலத்தில் பணியாற்றிய சகல ஊழியர்களையும் இந்தச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஊழியர் சங்க பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.







யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான தமிழ் இலக்கிய பெருவிழா முதல்நாள் நிகழ்வில் - கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பீட தலைவர் பேராசிரியர் எஸ்.மௌனகுரு மற்றும் கலாநிதி க.ரகுபரன் ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

# பெண்களின் சுயமுயற்சிகளுக்காக தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூகசேவைச் செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் உதவியுடன் போரால் விதவையாக்கப்பட்டவர்கள் மற்றும் முதிர்கன்னி நிலை அடைந்தோர்க்கும் - வாழ்வாதாரம் வழங்கும் வகையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்களால் கணவனை இழந்து குடும்ப வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்குச் சிரமப்படும் பெண்களுக்கு உதவும்முகமாகவும், திருமணமாகாது முதிர்கன்னி நிலையில் உதவிகளின்றி வாழ்வோருக்கு உதவும் முகமாகவுமே இந்தத் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

யாழ்.சமூகசேவைகள் செயற்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் 23 பேர் தையல் இயந்திரங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் - இவர்களுக்கான தையல் இயந்திரங்களை வழங்கினார். இந்த நிகழ்வில் இலங்கையில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவன தலைமைக் காரியாலய அதிகாரியான கே.மூற்றா, யாழ். பிரதேச செயலாளர் செந்தில்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

ஜேர்மன் தேசிய அரச அறிவியல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள அரசியல் கல்வி டிப்ளோமா, அரசியல் கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முதலான பாடநெறிகளுக்கான ஆரம்ப வகுப்புகள் - எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த டிப்ளோமாப் பாடநெறிகளைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட அனைவரையும் ஆரம்ப வகுப்புகளில் கலந்துகொள்ளுமாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் நா.யோகராஜன் கேட்டுள்ளார்.

இந்தப் பாடநெறியானது தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் 4 மணிவரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வாணிவிழாவை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

லேக்ஹவுஸ் நிறுவன இந்து மன்றத்தினர் வாணிவிழாவை முன்னிட்டு, அகில இலங்கை ரீதியில் தரம் ஒன்பதுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

'இந்து மதமும் பெண் தெய்வங்களின் வழிபாடும்' என்ற தலைப்பிலான இக்கட்டுரைப் போட்டிக்கு - மாணவர்கள் ஆயிரத்து ஐந்நூறு சொற்களுக்கு மேற்படாத வகையில் கட்டுரையை எழுதி, அதிபரது உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

வெற்றி பெறும் மாணவர்களுக்கு முறையே 5000, 3000, 2000 ரூபா பரிசாக வழங்கப்படும்.

கட்டுரைகள் யாவும், இந்த மாதம் 13 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர் லேக்ஹவுஸ் இந்து மன்றம், லேக்ஹவுஸ், கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். (31)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : சி.சிவருஷன்
முகவரி : நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



பெற்றோர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கம்



## தைரியத்தை பாராட்டலாம்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சௌரவ் கங்கூலியிடம் இலேசில் பேசி வென்றுவிட முடியாது. சச்சின் இல்லாத நிலையில் அவுஸ்ரேலியாவை எதிர்கொள்வது உங்களுக்குக் கஷ்டமாகவும், அவுஸ்ரேலியாவுக்கு ஒரு நம்பிக்கையையும் கொடுக்குமல்லவா என்று கேட்ட கேள்விக்கு சௌரவ் வேறுவிதமாகப் பதிலளித்து இருக்கிறார். அவுஸ்ரேலியர்கள் தம் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் இல்லாமல் தளர்ந்து போகப்போகிறார்கள் என்றொரு போடு போட்டிருக்கிறார்.

சௌரவ் கங்கூலி தன் அணியின் இளைய வீரர்களால் நேசிக்கப்பட்டவராகவே இருக்கிறார். நான் இன்று இந்த உயர் நிலைக்கு வந்தமைக்குக் காரணம் கங்கூலி அண்ணா தான் என்கிறார் ஹர்பஜன். இதனையே அணியின் எல்லாம் இளம் வீரர்களும் கூறுவார்கள் என்கிறார் அவர்.


கங்கூலியின் தன்னம்பிக்கை எப்படி அமையும் என்று சொல்லத்தேவையில்லாத



கில்கிறிஸ்ட் - கங்கூலி
சபாஷ், சரியான போட்டி

அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. அவுஸ்ரேலியர் எமது தாயகத்தில் விளையாடும் நிலையில் எமது கையே ஓங்கி இருக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் அவர். நாங்கள் தொடரை வெல்வோம் என்று வாய்ச்சவடால் புரியவரவில்லை. ஆனால், பயங்கர நெருக்குவாரத்தைக் கொடுப்போம் என்பது நிச்சயம் என்கிறார்.

அவுஸ்ரேலிய அணியுடன் எதிர்த்து விளையாடும்போது, அந்த உணர்வே இந்திய அணியின் அதி உச்ச பலத்துக்கான காரணமாக அமைகிறது என்கிறார் கங்கூலி. அவுஸ்ரேலிய அணியுடன் விளையாடுவதற்கென்றே எமது சக்தி முழுவதையும் சேகரித்து வைத்திருக்கின்றோம். எனவே, அதி உச்சத்திறன் டெஸ்ட் ஆட்டங்களில் வெளிப்படும் என்கிறார் அவர்.



ஹர்ப்பஜன் சிங்
நாகாஸ்திரம்

1969ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணித்தலைவர் பில் லோறியின் தலைமையில் இந்தியாவிற்கு வந்த அணி இந்தியாவை- இந்திய மண்ணில் வைத்து ஒரு தொடரில் தோற்கடித்த பின் இன்று வரை இந்திய மண்ணில் வைத்து இந்தியாவை அசைக்க முடியவில்லை. மேலும், 1996ன் பின் இந்திய மண்ணில் விளையாடிய ஏழு டெஸ்ட் போட்டிகளில் ஐந்தில் அவுஸ்ரேலியா தோற்றுள்ளது. 2001இல் இரண்டாம் நிலை அணி என்ற தகுதியில் இருந்த இந்தியா 2-1 என்று தொடரையே தன்வசமாக்கியது, இந்தியக் கிரிக்கெட்டின் ஒரு இனிப்பான அத்தியாயம்.


2003ம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா தோல்வியுற்றது. அதன் பின் நடைபெற்ற ஒருநாள் சுற்றுப்போட்டிகளில் இலங்கையில், நெதர்லாந்தில்- இங்கிலாந்தில் ஒருநாள் கிண்ணம் எதனையும் வென்றுகொள்ள கங்கூலியால் முடியவில்லை என்பது உண்மையே. ஆனால், இந்தியாவில் வைத்து கங்கூலியை வீழ்த்திவிடுதல் அவுஸ்ரேலியாவிற்கு இலகுவாக இருக்காது என்று நம்பலாம்.

-மக்டெலின்.

## நம்பிக்கையில் நியாயம் உண்டு

அவுஸ்ரேலியாவுக்கு பெருங்கனவொன்று உண்டு. அதுதான் இந்திய மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரொன்றில் இந்தியாவைத் தோற்கடிப்பது, நான்கு டெஸ்ட் போட்டிகளில் முதலாவது போட்டி நிறைவடையும் நேரம் இது. இந்த வேளையில் சுழற்பந்துவீச்சாளர் ஷேன்வோண் இம்முறை டெஸ்ட் தொடரைத் தட்டிச்செல்ல வேண்டும் என்பதில், மிக ஆர்வமாக இருக்கிறார். அதோடு இதுவே தனது டெஸ்ட் வாழ்வின் இறுதி இந்திய விஜயமாகவும் இருக்கக்கூடும் என்றும் நம்புகிறார். இந்த வகையில் ராகுல் டிராவிட்டை கட்டுப்படுத்துவதன் மூலம் அல்லது ஆட்டமிழக்கச் செய்வதன் மூலம் டெஸ்ட் தொடரை வெல்லும் வாய்ப்பு அதிகரிக்கும் என்றும் நம்புகிறார். இந்தியாவிற்கு வந்த இரண்டு மூன்று சந்தர்ப்பங்களிலும் ஏழெட்டுத்தடவை நான் டிராவிட்டின் விக்கெட்டை வீழ்த்தியிருக்கிறேன். டிராவிட்டைக் கவிழ்ப்பதற்கென்றே சில வியூகங்களை வகுத்து வைத்திருக்கிறேன். ஏனைய வீரர்களிடம் பயன்படுத்தாத சில வித்தியாசங்களை இவருக்குக் காட்டப்போகிறேன். அவுஸ்ரேலிய அணியின் வேறெந்தப் பந்து வீச்சாளர்களையும் விட கூடுதலாக நானே அவரை வீழ்த்தியிருக்கிறேன் என்கிறார்.

ஷேன்வோண் 527 விக்கெட்டுகளை சாய்த்த நிலையில், இந்தியா வந்திறங்கி இருக்கிறார். ஆறு விக்கெட்டுகள் வீழ்த்தினால் முரளியின் சாதனையை முறியடித்துவிடுவார். இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சாளருக்கு மிகவும் வாய்ப்பானது. அதுவும் ஷேன் வோண் சுழற்பந்துக் கலையில் பெரும் விற்பன்னர். எனவே நான்கு டெஸ்ட் போட்டிகளில் கணிசமான விக்கெட்டுக்களை சாய்ப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால்,



ஷேன் வோண்
சாதனை உனக்குண்டு

டெஸ்ட்தொடரை வெற்றி கொள்ளும் எண்ணம் ஈடேறுமா என்பது தெரியவில்லை.

ICC மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா அவுஸ்ரேலியா இரண்டுமே கனவு கலைந்தவை தான். அதுவும் கிண்ணமே அவுஸ்ரேலியாவுக்கு என்று உலகம் நம்பியிருக்க, இங்கிலாந்து பதற்றமே இல்லாமல் பரிதவிக்கவிட்டது அவுஸ்ரேலியாவை. இது ஒருபுறம் இருக்க, இந்திய - அவுஸ்ரேலிய தொடர்பற்றி அவுஸ்ரேலியா நிரம்பக் கவலைப்படுவது உண்மையாக இருந்தாலும், முதல் இரண்டு அல்லது மூன்று டெஸ்ட் போட்டிகளுக்கு அணித்தலைவரான ரிக்கி பொண்டிங் இல்லை என்பது பற்றித் தலையைப் பிய்த்துக் கொள்ளவில்லை.

ஆனால், இந்திய அணி பொறுத்துக் கிடைக்கும் செய்திகளைப் பார்த்தால் அவுஸ்ரேலியாவைக் கவிழ்ப்பது எப்படி என்று கவலைப்படுவதைவிட, சச்சின் டெண்டுல்கர் அணியில் இல்லாமல் போவாரோ, அல்லது விளையாடுவாரோ என்று அவரது உபாதை தொடர்பான வைத்திய அறிக்கைகள் பற்றி நிரம்பக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக் கைககளே ஒரு ஆய்வுக் கட்டுரையாக வெளிவரும் போலத் தெரிகின்றது. இப்படியாக சச்சின் இல்லாவிட்டால் இந்தியாவே இல்லை என்று புலம்பிக் கொண்டே இருந்தால், ஏனைய வீரர்கள் எல்லாம் மட்ட ரகமானவர்களா?

- பிரியா.

## உன்னையே நீ அறிவாய்

இங்கிலாந்து அணி ஒரு போட்டியில் தோற்கிறது என்றால் அது துடுப்பாட்ட வீரர்களால்தான். ட்ரெஸ்கோதிக், பிளின்ரொப் தவிர வேறு யாரும் நிலைத்து நின்று ஓட்டங்களைக் குவிப்பதில்லை. அதுவும் மைக்கல் வோண் இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்கப் பெரிதும் சிரமப்படுவார். பிராட்ஷோ பந்தில் அவர் ஆட்டமிழந்ததில் வியப்பேதுமில்லை என்று கடுமையாக விமர்சனம் செய்திருப்பவர் வேறுயாருமல்ல. இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரான ஜெப்றி பொய்கொட்.



பொய்கொட்
உண்மையைச் சொன்னா ஒத்துகனும்

தொடர்ச்சியாக 13 ஒரு நாள் போட்டிகளில் அவுஸ்ரேலியாவுடன் தோல்வி அடைந்த, இங்கிலாந்து அணி- எட்பாஜ்டனில் நடந்த அரையிறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவை தோற்கடித்து, தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்த வெற்றிக்கு அணித்தலைவர் வோணின் பங்களிப்பு அளப்பெரியது. துடுப்பாட்டத் தில் 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த தோடு, பந்துவீச்சிலும் 2 விக் கெட்டுக் களையும் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். இந்தச் சிறப்பான வெற்றி பெற்றபோது, பாராட்டாத, பொய்கொட், இறுதிப்போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணியிடம் தோல்வியடைந்தபோது, விமர்சனம் செய்ததைத்தான் இங்கே மனம் கொள்ள வேண்டும்.

இப்போது எழுச்சி கண்டுள்ள இங்கிலாந்து அணி இந்த ICC இறுதிப்போட்டியில் தோற்றதைப் போலல்லாமல் 2006ஆம் ஆண்டு இந்தியாவில் நடக்கும் மினி உலகக் கிண்ணத்தையும், 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் கைப்பற்ற வேண்டுமென்பதையும் மனதில் கொண்டே அவ்வாறு கூறியிருக்க வேண்டும். அணி சாதிக்க வேண்டுமானால், திறமையான சில துடுப்பாட்ட வீரர்களை அணியில் சேர்க்க வேண்டும் என்றும் கூறுகிறார் அவர்.

மூத்த வீரர்கள் தங்கள் நாட்டு அணியில் உள்ள வீரர்களை வளப்படுத்துவதற்காக விமர்சனம் என்ற பேரில் வீரர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது வழமையான ஒன்றுதான். அதை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் வீரர்களின் கையிலேயே தங்கியுள்ளது. இதையேன் கூறுகிறோம் என்றால், பொய்கொட்டின் கூற்றிலும் உண்மையில்லாமல் இல்லை. ஏனென்றால் நடந்து முடிந்த ICC கிண்ணத் தொடரில் இலங்கையுடனான போட்டியில் சொய்சாவின் பந்து வீச்சிலும் இறுதிப் போட்டியில் பிராட்ஷோவின் பந்துவீச்சிலும் 7,5 ஓட்டங்களைப் பெற்று Bowled முறையில் வோண் ஆட்டமிழந்திருந்தார். அத்துடன், இந்தத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்தியாவுடன் நடந்த நட்வெஸ்ட் தொடரிலும் இர்பான் பதான், ஆஸிஸ் நெஹ்ரா ஆகியோரின் பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்பட்டதும் பொய்கொட்டின் கருத்தை அதாவது - இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்க பெரிதும் சிரமப்படுவார் என்பதை நிருபிக்கவே செய்துள்ளது எனலாம்.

எனவே, வோண் இனி வரும் போட்டிகளில் இடதுகை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ப தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இல்லையென்றால், அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து போன்ற சில அணிகளுடனே விளையாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட வேண்டியிருக்கும். ஏனென்றால், இந்தச் சில அணிகளில் தான் இப்போது இடதுகை வேகப் பந்து வீச்சாளர்கள் இடம்பெறாதுள்ளனர்.

- விமலன்.



மைக்கல் வோண்
சிந்தனை செய் மனமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியொரு விதி செய்வோம்



தைபு
கடுகு சிறுத்தாலும்

**பா**கிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே அணிகள் கலந்து கொள்ளும் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில் ,பெஷாவரில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இங்கு பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது ஒன்றும் பெரியவிடயமல்ல. சிரேஷ்ட வீரர்கள் இல்லாதபோதும், அனுபவத்திலும், வயதிலும் மிகவும் இளையவர்களைக் கொண்ட சிம்பாப்வே அணி பலம்வாய்ந்த பாகிஸ்தான் அணிக்கு எதிராக 4 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. தைபு தலைமையில் சிம்பாப்வே பெற்ற அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும். இந்த இலக்கை அடைய பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுகளை இழந்தமையே முக்கியமான விடயமாகும்.

அண்மையில் சிம்பாப்வே அணியின் சிரேஸ்ட வீரர்கள் அனைவரும் அணியில் இருந்து விலகியதை அடுத்து குழந்தைகள் அணியாக கட்டியெழுப்பப்பட்ட சிம்பாப்வே அணி, வளர்ந்து வருவதை இப்போட்டி எடுத்துக் காட்டுகின்றது.

பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்துவீச்சாளர்களுக்கு எதிராக சிம்பாப்வே அணியின் மற்சிகென்யேரி, ரெய்லர், தைபு, இப்ராகிம் ஆகியோர் தமது துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்கள் பாகிஸ்தான் அணிப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை எல்லைக் கோட்டிற்கு வெளியேயும், எல்லைக் கோட்டிற்கு மேலாகவும் விரட்டி விரட்டி அடித்து பாகிஸ்தான் அணியை நிலை குலையச் செய்துவிட்டனர். அதிலும் இப்ராகிம், தைபு ஆகிய இருவரையும் இறுதிவரை பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களால் ஆட்டமிழக்கச் செய்ய முடியாமற்போனமை குறிப்பிடத்தக்கது.



முகமட் சமி
திணறித்தான் போனோம்

சிம்பாப்வே அணியின் பந்து வீச்சாளர்களும், தமது திறமையை நன்றாகவே வெளிப்படுத்தியுள்ளனர். ஏனெனில், பாகிஸ்தான் அணி குழந்தைகள் பட்டாளத்திடம் 7 விக்கெட்டுக்களை இழந்தே இலக்கை அடைந்தது. அதிலும் பன்யன்கார பயங்கரமாகப் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

எனவே, இன்னும் ஒருசில வருடங்களில் சிம்பாப்வே அணி ஏனைய பலம்வாய்ந்த அணிகளுக்கு சவாலாக விளங்கும் என்பது திண்ணம்.

- லெஸ்லி.

# பொறுமை இழக்கிறாரோ

**டெ**ண்டுல்கர் சற்று சூடாகவே பேசுகிறார். தொடர்ந்தும் டெண்டுல்கர் அப்படி, இப்படி என்று குறை குறையாகக் கூறுவது பற்றியே இப்பொழுது தன் பொறுமையை இழந்திருக்கிறார். அதோடு தான் மற்றும் தன் அணி சார்ந்த குற்றச்சாட்டுக்களுக்கும் அவர் பதிலளிக்கிறார். மாற்றங்கள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். ஒவ்வொரு அணியும் ஒரு திட்டம் வைத்திருக்கும். அதன்படியே அது விளையாட்டை முன்னெடுக்கும். என்னைப் பொறுத்தவரை அணியின் தேவையைப் பொறுத்துத்தான் விளையாடுவேன். சில வேளைகளில் பதினைந்து ஓவர்களில் நூறு ஓட்டங்களைத் தாண்ட வேண்டி இருக்கும். சில வேளை அப்படி இராது. வேகமாக ஓட்டம் சேகரிக்க முயன்று ஆட்டமிழந்து விட்டால், பலவித விமர்சனங்கள். ஆனால், அந்தச் சூழ்நிலையை மறந்து விடுகிறார்கள். ஏன் அந்த அவசரம். அந்த அடியைத் தவிர்த்திருக்கலாமே என்றெல்லாம் விமர்சனங்கள்.



சச்சின்
சாது மிரண்டால்

அதுவும், வர்ணனையாளர்களின் தொல்லைதாங்க முடியாமல் இருக்கிறது. நான் என்றும் போலத்தான் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கிறேன். அது எனக்குத் தெரியும். எல்லோரையும் என்னால் திருப்திப்படுத்திக் கொண்டிருக்க முடியாது.

அதோடு 1989 இல் எப்படி விளையாடினேனோ அதே தரத்தில் இன்றும் விளையாடிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

இதில் இன்னொரு துயரம் என்னவென்றால் நன்கு அனுபவம் வாய்ந்த பிரபல்யம் நிறைந்த கிரிக்கெட் வீரர்கள் கூட என்மீது குற்றம் சுமத்துவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஒன்றைமட்டும் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது எந்தப் பிரபல்யமான கிரிக்கெட் வீரனும் தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு சீராகத் தன் தகைமையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கவில்லை. அது எனக்கும் பொருந்தும் அல்லவா என்று கேட்கிறார் சச்சின். இது நியாயம் தானா?

-சர்மிளா.

விளையாட்டு அரங்கம்




தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அறிமுகமாகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிறுவர் தின நிகழ்வு

உலக சிறுவர் தின நிகழ்வுகள், கடந்த வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 500இற்கு மேற்பட்ட முன்பள்ளிச் சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த இந்த நிகழ்வு, அண்மையில் மன்னாரில் இடம்பெற்ற பதற்றச் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியின் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் வேழினி தலைமையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது. வித்தியானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற மகளிர் சங்கம நிகழ்விலேயே, இந்தத் தெரிவுகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீதி ஒழுங்கு விழிப்புணர்வு

முல்லைத்தீவு மாவட்ட காவல்துறையின் வீதி ஒழுங்குகள் தொடர்பான விழிப்புணர்வை நிகழ்த்தி வருகின்றனர்.

பாடசாலைகள், அரசு, அரச சார்பற்ற அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் எனப் பல இடங்களில் தமிழீழ காவல்துறையினர் இந்த விழிப்புணர்வை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மகப்பேற்று விடுதி

கிளிநொச்சி உருத்திரபுரம் மருத்துவமனையில் மகப்பேற்று விடுதியைப் புனரமைப்பதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது, இந்த மருத்துவமனை சிதைந்து அழிக்கப்பட்டது.

தற்பொழுது பெருமளவிலான மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால், இந்த மகப்பேற்று விடுதியை யுனிசெவ் மீள புனரமைத்துக் கொடுக்க இருக்கின்றது.

## இடநெருக்கடி

மன்னார் - ஆத்திமோட்டை சிறுவர் முன்பள்ளி இடநெருக்கடிகளின் மத்தியில் இயங்கிவருகிறது.

இந்த முன்பள்ளிக்கென தனியான கட்டடம் இல்லாத நிலையில், கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் இயங்கிவருகின்றது.

# ஆசிரியர்கள் கல்விப் பணிகளில் மட்டுமன்றி சமூக, போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்!

## கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவிப்பு

ஆசிரியப் பெருந்தகைகள் மாணவர்களுக்காக ஆற்றுகின்ற கல்விப் பணியும், கல்வியை கற்கின்ற மாணவர்கள் ஆர்வத்தோடு, அக்கறையோடு தமது கல்வி நிலையை உயர்த்த வேண்டும் என்பதற்காக அவர் மேற்கொள்கின்ற மிகக் கடினமான உழைப்பு இந்தப் பெறுபேற்றுக்குக் காரணமாகின்றன என, கல்விக கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக ஆசிரியர் நாளிலே ஆசிரியர்களது நிலையை எண்ணிப்பார்க்க வேண்டியது இன்றியமையாத கடமையாகும் அந்த வகையிலே ஆசிரியர் தொழிலிலே பணியாற்றுகின்ற அனைவரும் ஒரே நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றார்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டிய நிலை இருக்கின்றது.

கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் சேவைக்கு மிகுதியாக இருப்பதும், தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாக இருப்பதும் இந்த ஆசிரியர் பணியிலே இருந்து வருகின்ற ஒரு நிகழ்வு.

இந்த ஆசிரியர் பற்றாக்குறையினாலே எமது தாயகப்பகுதி மட்டும் பாதிக்கப்படவில்லை. இலங்கைத்தீவு முழுவதுமுள்ள தமிழ்மொழி மூலக்கல்வி பாதிக்கப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக நாங்கள் பார்க்கின்றபோது, கிளிநொச்சி மாவட்டம் ஆகக் கூடுதலான பாதிப்பை, நெருக்கடியை ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றது.

எமது மாவட்டத்தின் தரமான ஆசிரியர்களை உள்வாங்கப் போகின்றோம். எப்போது அந்த நிலை ஏற்படப் போகின்றது என்று நாங்கள் எடுத்துக்கூறிவிடமுடியாது. அப்படியான நிகழ்வு நடக்குமா என்பது ஐயத்துக்குரியதாகவும், எமது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கின்றது.

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கிளிநொச்சியில் கல்வி நிலை பற்றி கல்விப்பணிப்பாளர் மனம் புளுங்கிய நிலையில் வருத்தத்தோடு எடுத்துக் கூறினார்கள். இந்த நிலைக்கு கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதே காரணம். நிர்வாகத்தை மேற்கொள்வது ஒருபுறம் இருக்கின்ற ஆசிரியர்களிடம் கூடுதலாக வசதி வாய்ப்பை வழங்காது வேலைப்பளுவை வழங்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருபபது என்பது இன்னொருபுறம். இந்த நெருக்கடி களுக்கிடையிலே மாவட்டத்தின் கல்விநிலை தொடர்பாகப் பல்வேறு தரப்பினருக்குத் தனது பதிலை வழங்கவேண்டிய சூழலிலே ஒரு நெருக்கடியான காலகட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றார் கல்விப் பணிப்பாளர்.

அவர் மட்டுமல்ல, பணியாற்றுகின்ற ஒவ்வொரு ஆசிரியர்களும் தங்களது வேலை ஒழுங்கைவிடக் கூடுதலான சுமையோடுதான் பணியாற்றுகின்றனர். ஏனென்றால், இந்த ஆசிரியர் பற்றாக்குறையோடு எமது கல்வி நிலையை நாங்கள் தொய்யவிட்டுவிடவில்லை. ஏனைய மாவட்டங்களோடு போட்டிபோட்டுக் கொண்டு கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களின் பணியைப்பற்றிக் கூறுவதற்கு இந்த மாவட்டத்தின் பெறுபேறுகளை வைத்துக்கொண்டு பார்த்தாலே போதுமானதாகவிருக்கின்றது.

க.பொ.த. உயர்தர பெறுபேற்றை பார்க்கின்றபோது, ஆண்டு 1இல் இருந்து ஆண்டு 11 வரை கற்கின்ற மாணவர்கள், ஆசிரியர் பற்றாக்குறை, இடநெருக்கடி, கல்வி உபகரணப் பற்றாக்குறைகளுக்கிடையிலே தரமான பாடநூல்கள் இல்லாமையால், கிடைக்கின்ற பாடநூல்கள் காலதாமதத்தால் இடைக்கின்றமையாலேயே இப்படிப் பல்வேறு நெருக்கடிகளுக்கிடைலே இந்த மாணவர்கள், ஆசிரியர்கள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இன்னல்களால் அவர்கள் அடிக்கின்ற எதிர்நீச்சல்கள் பெறுபேற்றை உதாரணமாக மிளிர்வதை நாங்கள் மறந்துவிடமுடியாது. இவ்வளவு தாக்கங்களுக்கிடையிலே இலங் கையிலுள்ள 30 மாவட்டங்களில் க.பொ.த. சாதாரண தேர்வைப் பொறுத்தவரையில் 30 ஆவது நிலையில்தான் கிளிநொச்சி இருக்கின்றது என்பதை நாங்கள் மறந்து விடமுடியாது. ஆனால் அதே நேரம், இந்தக் க.பொ.த. சாதா ரண தேர்விலே தேர்ச்சி பெற்ற மாணவர்கள்தான், அடுத்த கட்டத்தைத் தாண்டி க.பொ.த. உயர்தரத்திலே பயிலுகின்றனர். தேர்விலே தோற்றுகின்றனர். அந்த பெறுபேற்றை பார்க்கின்ற போது, கிளிநொச்சி மாவட்டம் இலங்கையிலே ஒருமுதல் நிலையில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர் வீதத்திலே முதல் நிலையில் இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். க.பொ.த.சாதாரண தேர்வில் இலங்கையின் கடைசி நிலையில் இருந்த மாணவர்களின் பெறுபேறு க.பொ.த. உயர்தரத்தை பொறுத்த வரையில் இலங்கையிலேயே முதலாவது இடத்தில் இருப்பதையிட்டு பெருமைப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல, இங்கு நெருக்கடியான காலகட்டத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து இந்தக் கல்விப் பணியை ஆற்றுவதோடு, தமது கடமை முடிவுற்றது என்று விட்டுவிடவில்லை. பெரும்பாலானவர்கள் சமூகப் பணியிலும், போராட்டப் பணியிலும் தம்மை பல்வேறு வகையிலும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாங்கள் நேரடியாகப் பார்க்கிறோம். அவர்களுடைய பங்களிப்பைப் பெற்றுக் கொள்பவர்கள் என்ற வகையில் நான் இதை எடுத்துக் கூறுகிறேன்.

இந்த நிலையில் ஆசிரியர்களை பாராட்டுகின்ற நிகழ்விலே உலக ஆசிரியர்களுக்கு விழா எடுக்கின்ற இந்த நாளிலே உலக ஆசிரியர்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நிலையில் நாம் இருக்கிறோம். உலக் நாடுகளிலுள்ள ஆசிரியர்களோடு ஒப்பிடுவதற்கு முதல் இந்த நாட்டில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஏனைய மொழி ஆசிரியர்களோடு ஒப்பிடுகின்றபோது அவர்களின் நிலையில் அவர்களுடைய வேலைப பளு மிகவும் குறைவாக இருக்கின்றது. இந்த ஆசிரியர் பற்றாக்குறை என்பதால் கூடுதலான சுமை எமது ஆசிரியர் மீது சுமத்தப்பட்டதை எண்ணிப் பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்புலிகளின் துணைத்தளபதி நிரோஜனின் நினைவுநாளும், ஒலிப்பேழை வெளியீடும்!

(முல்லைத்தீவு)

கடந்த 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி வீரச்சாவடைந்த, கடற்புலிகளின் தாக்குதல் தளபதியும், கடற்புலிகளின் துணைத் தளபதியுமான லெப்டினன்ட் கேணல் நிரோஜனின் 5 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள், கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வு கடற்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் ரங்கன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான சலீம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். மாவீரரின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடரையும், மலர்மாலையையும் நிரோஜனின் பெற்றோர் அணி வித்தனர்.

தொடர்ந்து கடற்புலிகளின் மகளிர் அணியினரின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து நிதர்சன நிறுவனத்தின் உருவாக்கத்தில் உருவான 'அலைபாடும் பரணி' என்ற ஒலிப்பேழை வெளியீடும் இடம் பெற்றது.

நிதர்சனப் போராளி வீரா தலைமையில் இடம்பெற்ற ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில வரவேற்புரையை நிதர்சன மகளிர் பொறுப்பாளர் பிரமிளா நிகழ்த்தினர். சிறப்புரையை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினர். வெளியீட்டுரையை நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்த, ஒலிநாடாவின் முதல் பேழையை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை வெளியிட்டு வைக்க, மாவீரர் ரஞ்சனின் தாயார் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை கடற்புலிகளின் சிறப்புப் படையணித் தளபதி ஸ்ரீபன், தளபதிகள் சலீம், கவி, பைந்தமிழ் கப்பல் கட்டுமாணப் பகுதியைச் சேர்ந்த ஆனதி கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், தளபதி தீபன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

ஒலிப்பேழையின் மதிப்பீட்டுரையை வெளிசசம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார். தொடர்ந்து கடற்புலிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# ஆண்டான்குளம் பாடசாலையில் மகளிர் கருத்தரங்கு இடம்பெற்றது

(மன்னார்)

மன்னார் ஆண்டான்குளப் பாடசாலையில் மகளிர் கருத்தரங்கு ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

மடுவலயப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தினர்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவரசி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கை மடுவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் யேசுதாசன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளியழகன். மன்னார் மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை, மடுவலய மாணவர் அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜோன் மேரி ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

# வவுனியாவில் இருந்து வாகனங்கள் கடத்தப்பட்டு வருவதாக தெரிவிப்பு

வவுனியாவில் இருந்து பல இலட்சம் பெறுமதியான வாகனங்கள் கடத்தப்பட்டு வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.


தென்னிலங்கையில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்டு, வவுனியாவுக்கு கொண்டு வந்த வாகனங்கள், வடபகுதிக்கு கடத்தப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் இவ்வாறு கடத்திக் கொணடு வரப்பட்ட வாகனம் ஒன்றைப் பொலிஸார் கைப்பற்றியதாகவும், இது தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் தொடர்பான முக்கிய சூத்திரதாரி இன்னும் கைதாகவில்லை என்று வவுனியா பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு கழகத்தால் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற நிகழ்வில் தேசியக் கொடியை வட்டக்கச்சி அரசியற்துறையைச் சேர்ந்த இராமஜெயம் ஏற்றுவதை முதலாவது படத்திலும், சிறுவர்கள் முட்டி உடைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம்: இராமநாதபுரம் செய்தியாளர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். திருக்குறள்

# நமது நோக்கு

## ஆழ ஊடுருவித் தாக்கிய அணியினரின் முடிவு!

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவந்த ஆழ ஊடுருவித் தாக்கும் படைப் பிரிவை இராணுவத் தலைமைப்பீடம் கலைத்துவிட்டதாக இராணுவத்தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இந்தச் செய்தியின் ஆழமூலங்களும், அது கலைக்கப்பட்டதற்கான உள் மற்றும் புறநோக்கங்களும், இன்னமும் ஆராயப்படவேண்டிய விடயமாகவே உள்ளது.

LR.R.P எனச் சுருக்கக் குறியீட்டு பெயரால் அழைக்கப்பட்டு வந்த இந்த படைப்பிரிவு குறிப்பிட்ட எண்ணிக்கையான நபர்களை உறுப்பினர்களாக கொண்டு தமிழர் தாயகப் பகுதிகளின் இராணுவக்கட்டுப்பாட்டிலுள்ள எல்லைப் பிரதேசங்களில் நிலைகொண்டிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவ கட்டமைப்பை சிதைக்கும் நோக்குடன் அவர்களின் சிரேஷ்ட முக்கிய தலைவர்களையும் தளபதிகளையும் இலக்கு வைத்து தாக்கியழிக்கும் முனைப்புடன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1999 ஆம் ஆண்டு இறுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் அப்போதைய இராணுவத் தளபதி லயனல் பலகல்லவின் மேற்பார்வையில் மேற்படி பிரிவின் பொறுப்பதிகாரியாக விளங்கிய பிரிகேடியர் கபில ஹெந்தவிதாரணவினால் உருவாக்கப்பட்ட இந்த அணியில், அரசபடையினருடன் துணைப்படையாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் ஆயுதக்குழுக்களைச் சேர்ந்தவர்களே அதிகளவுக்கு அங்கம் வகித்தனர்.

தமிழர் தாயகத்தின் எல்லைப்புறக் காட்டுப்பகுதிகரூடாக நகர்ந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு, கிழக்கு பிரதேசங்களுள் ஆழ ஊடுருவி - விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள், தளபதிகள் ஆகியோரின் நடமாட்டங்களைக் கண்காணித்து பின் அவர்கள் மீது நன்கு திட்டமிட்ட வகையிலான கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்தவென நன்கு பயிற்றப்பட்ட இந்த ஆழ ஊடுருவித் தாக்கும் படையினரின் மற்றொரு முக்கிய நோக்கம் - புலிகளின் உறுப்பினர்களையும் தமிழ்மக்களையும் உளவியல் ரீதியில் குழப்பத்தில் ஆழ்த்துவதேயாகும்.

உளவியல் ரீதியான தாக்குதல் இலக்கினையும் கொண்ட இந்த நடவடிக்கையாளர்களின் ஆரம்பகால செயற்பாடுகள் தமிழ்மக்களுக்கு அதிர்ச்சியையும், விடுதலைப் புலிகளுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது உண்மைதான். அந்த வகையில் அவர்கள் தமது இலக்கினை எட்டுவதில் ஓரளவுக்கு வெற்றியைப் பெற்றார்கள் என்றே கூறவேண்டும். துணைப்படைத் தமிழ்க்குழுக்களின் உதவியின்றி இராணுவம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவே முடியாது.

ஆனாலும் விடுதலைப் புலிகளின் LR.R.P முறியடிப்பு நடவடிக்கைகளும், எல்லைப்புற தமிழ்மக்களின் எச்சரிக்கை உணர்வும் பின்னர் இவர்களின் நடவடிக்கைகளுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியதும் இவர்களின் செயற்பாடுகளில் தேக்கநிலை ஏற்பட்டது.

பொ.ஐ.முன்னணி அரசின் தேர்தல் தோல்வியும் ஐ.தே.மு. அரசின் பதவியேற்பும் புதிய சமாதான சூழலை உருவாக்கவே இந்த அணியினரின் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன.

இதற்குள் தேர்தல் காலத்தில் நிகழ்ந்த அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் அமைந்துள்ள இந்த அணியினரின் ரகசிய பாதுகாப்பு மறைவிடம் மீதான திடீர் சோதனை நடவடிக்கைகள், இவர்களின் செயற்பாடுகள் தொடர்பான புதிய பல தகவல்களை பரபரப்பாக வெளிக்கொணர வைத்தது.

இந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகவும் ஆபத்தான இரசாயன ஆயுதங்கள் இராணுவத்தரப்பினருக்கு நெருக்கடியையும் சிக்கல்களையும் ஏற்படுத்தியது. சர்வதேச மனிதநேய சட்டவிதிகளுக்கு முரணான இந்த இரசாயன ஆயுதங்களை தமிழ்மக்களுக்கு எதிரான போரில் அரசபடையினர் பயன்படுத்தினர் என்பது நிரூபணமாயிற்று.

இந்தப் படையணியினரின் செயற்பாடுகளுடன் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் அரசியல் ஜெனரல் என வர்ணிக்கப்படுபவருமான அனுருத்த ரத்வத்தைக்கும் அவரின் புதல்வர்களான மகேன் மற்றும் சானுக்க ஆகியோருக்கு இருந்த தொடர்புகளும் ஊடகங்களில் செய்தியாகின.

கொழும்பின் கேந்திரப் பகுதியில் மக்கள் வதிவிடத் தொகுதியில் - பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களை இந்த அணியினர் வைத்திருந்தமையானது பல தரப்பினரதும் கடும் கண்டனத்துக்குள்ளாகியது.

இதன்பின்னர் இந்த அணியைச் சேர்ந்த பலர் தொடர்ந்து அடுத்தடுத்து கொழும்பிலும் ஏனைய புறநகர்ப் பகுதிகளிலும் வைத்து மர்மமான முறைகளில் கொலைசெய்யப்பட்டனர். அப்போதே இந்த அணி சிதைவுற்று ஆட்டங்காணத் தொடங்கி விட்டது.

அண்மையில் இதே மிலேனியம் சிற்றி மறைவிடத்தில் வைத்து கருணா கும்பலைச் சேர்ந்தவர்கள் பலர் கொல்லப்பட்டமையானது, கருணாவின் ஆட்களும் LR.R.P அணியுடன் சேர்ந்து இயங்கத் தொடங்கிவிட்டமையை நிரூபித்தது. இந்தநிலையில் அந்த அணியை இராணுவத் தலைமைப்பீடம் கலைத்து விட்டதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

ஏற்கனவே பரந்த அளவில் பகிரங்கப்பட்டும் பலவீனப்பட்டும் போயுள்ள இந்த அணியை கலைப்பதைவிட வேறுவழி இராணுவத் தலைமைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே கலைத்துவிட்டார்கள்.

புலனாய்வு அமைப்புக்களை ஒரே கட்டமைப்பின் கீழ் கொண்டுவர பாதுகாப்பு அமைச்சு முடிவெடுத்துள்ளமையும் இதற்கு மற்றொரு காரணமாகவிருக்கலாம். எதுவானாலும் LR.R.P அணியினரின் வீழ்ச்சியானது இராணுவ புலனாய்வுத்துறையினரின் திட்டமிடலுக்குக் கிடைத்த தோல்வியும் பின்னடைவுமேயாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி :- மீண்டும் எரிபொருள், மின்கட்டணம் உயரவுள்ளது.

# யாழ்.பல்கலை விஞ்ஞான பீடத்தில் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி!

யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி, மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சியொன்று நடாத்தப்படவுள்ளது. எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த விஞ்ஞான கண்காட்சியில் - இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், கணித புள்ளிவிபரவியல், கணினியியல் மற்றும் மீன்பிடி டிப்ளோமா ஆகிய துறைகளைச் சார்ந்த விடயங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எமது தாயக வளங்களைப் பயன்படுத்தி, தன்னிறைவு காணுவோம் எனும் நோக்கில் அமைந்துள்ள இந்த கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்குத் தேவை யான விடயங்களுடன், பொதுமக்களுக்குப் பயன்தரக் கூடிய பல்வேறு காட்சிப் பொருட்களும் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்கென, தமிழர் தாயகப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் அனைவரும் வருகை தருவர் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. மாணவர்கள் வந்து செல்வதற்கான ஒழுங்குகளை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

தற்போதைய சூழலியல் பிரச்சினைகள் தொடர்பாகவும், இந்தக் கண்காட்சியில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்களை தற்போது மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் ஈடுபட்டுள்ளனர். (94)

## பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல் விநியோகம்

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்களை விநியோகிக்கவுள்ளது.

கொழும்பு நூலக ஆவணவாக்கல் சபையால் முன்னெடுக்கப்படும் இந்த இலவச நூல் வழங்கல் திட்டத்தின்மூலம் மாணவர்களின் நூலகக்கல்வி விருத்தி செய்யப்படும்.

வலிகாமம் வலயப் பாடசாலைகளின் முகவரி, அதி பரின் பெயர் என்பவற்றின் இரு பிரதிகளைக் கோட்ட ரீதியாக அனுப்பிவைக்குமாறு, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரை மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் கேட்டுள்ளார். (91)

ஆசிரிய சேவையில்

## பதவி உயர்வுகளை இலகுவாக்க பிரமாணக் குறிப்பில் மாற்றங்கள்!

(கொழும்பு)

ஆசிரிய சேவையிலுள்ள பதவி உயர்வுகளை மேலும் இலகுவாகப் பெறும் வகையில், ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

இதற்கான சுற்றுநிருபம் மிக விரைவில் கல்வி அமைச்சால் வெளியிடப்படவுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சு ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வருகிறது.

இதற்கென கல்வி அமைச்சால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட, ஆறு ஆசிரியத் தொழிற் சங்கங்கள் நியமிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (122)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு நிவாரணம் வழங்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம் மக்களுக்குக் கடந்த மூன்று மாதங்களாக உலர்உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம், குருநாகல், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும், இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவில்லை.

இந்த நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்காததால், அவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

நோன்பு காலம் நெருங்கி வருவதால், இவர்களுக்கான நிவாரணங்களை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு வழங்கப்படவுள்ள நிவாரணத்தில் - 30 சதவீத வெட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும், இதைத் தடுத்து நிறுத்துமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள கோரிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (01)

## மின் வேலைகளை துரிதப்படுத்துமாறு பொது ஸ்தாபனங்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களுக்கு மின் சாரம் வழங்கும் வேலைகளைத் துரிதப்படுத்துமாறு அந்தப் பகுதி பொது ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத் துள்ளன.

இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவென, பெருந் தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், மின்விநியோக வேலைகள் தாமதமாக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகின்ற போதும், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. (122)

## பிரதம நீதியரசர் பதில் ஜனாதிபதியாவாரா?

(கொழும்பு)

ஜனாதிபதி பதவி விலகிப் பிரதமமந்திரியாக வந்தால், தலைமை நீதியரசர் பதில் ஜனாதிபதியாகச் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய ஜனாதிபதி தமது பதவியைவிட்டு எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு விலகவேண்டும் என்ற நிலையில், அதற்கு முன்னர் அவர் அரசியலமைப்பை மாற்றியமைத்துப் பிரதமமந்திரியாக வரவேண்டுமென்ற முனைப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கமையவே அவர் தமது அரசாங்கத்தின் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்க முயற்சித்து வந்தார். இந்த நிலையில் தற்சமயம் அவர் பிரதம மந்திரிப் பதவியைப் பொறுப்பேற்கும் பட்சத்தில், அதற்குப் பதிலாகக் கட்சியிலிருந்து எவரையும் நியமிக்காது பெயருககு ஜனாதிபதியாகத் தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவை நியமிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த கட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை எதிர் வரும் ஜனவரியில் இருந்தே ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளும் 2ம் லெப். மாலதியின் நினைவுநாளும்

பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். பெண்ணானவள் இப்படித்தான் இருப்பாள்! இதற்குமேல் அவளால் முடியாது, ஆணைவிடப் பெண்ணுக்கு ஆற்றல் குறைவு என்ற கருத்தை ஆழமாகக் கொண்டே மனித சமூக அமைப்பு வேரூன்றிவிட்டது.

வரலாற்றில் எழுந்த இலக்கியம், இதிகாசம், புராணம் என எதுவானாலும் பெண்ணின் புற அழகுக்கே முக்கியத்துவத்தைக் கொடுத்து, பெண்ணின் பலத்தை வெளிக்கொணராமல் போயுள்ளன.

பெண் இயலாமையின் வடிவம் என்ற விம்பத்தைத் தோற்றுவிப்பதில், சமூகத்தின் பிற்போக்குவாதிகள் வெற்றி கண்டுள்ளனர்.

வீட்டில் ஆண் குழந்தை பிறந்துவிட்டால்,



மகிழ்ச்சிப் பெருமிதம். பெண் பிறந்துவிட்டால், கவலை, ஏக்கப் பெருமூச்சு. இதுதான் இன்றுள்ள நிலை. இந்த அவலம் ஏன் நமக்கு ஏற்பட்டது? ஏன் எங்கள் மனங்களில் மாற்றம் வரவில்லை. ஒரு ஆணுக்குரிய ஆற்றல் அவ்வளவும் பெண்ணுக்கும் இருக்கிறதுதானே. அப்படியிருந்தும் சமூகத்தில் ஏன் இந்தப் பாகுபாடு? இந்தக் கேள்விகள் எல்லோரது மனங்களிலும் எழவேண்டும். இதற்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கும் திறன் புதிய தலைமுறைக்கு உண்டு.

மனித வரலாற்றில் கிறிஸ்துவுக்கு 6000 (ஆறா யிரம்) ஆண்டுகளுக்கு முன் - தாய் வழிச் சமூகமே இந்த உலகில் ஆட்சிபுரிந்தது. காடுகளில் குழுக்கள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் தாயின் ராஜ்ஜியமே நடைபெற்றது. குழுவுக்குத் தாய்தான் தலைமை தாங்கினாள். பெண் பெரிதாக மதிக்கப்பட்டாள். தாய் என்ற சொல் மருவி, தலைவர் என்றாகிவிட்டது என வரலாற்றாசிரியர்கள் பேசுகன்றனர். தன்னுடைய இனத்தைக் காககும் சக்தியாகப் பெண் விளங்கினாள். அவளின் சக்திக்குக் கட்டுப்பட்டு, பின்னால் செல்ல அவளது சமூகம் தயாராகவிருந்தது. அன்று தனது இனத்தைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு உணவு கொடுக்கவும், தேவையானவற்றைத் தேடிக்கொடுக கவும், தாயானவள் தன்னைப் பலி கொடுக்கவும் தயாராகவிருந்தாள் என்பது உயர்ந்த தியாகமாகும். அது அன்றே இருந்தது.

எதிரிகளிடமிருந்தும், காட்டு விலங்குகளிடமிருந்தும் தனது இனத்தைக் காக்கத்தானே தலைமை தாங்கி வழி நடத்தினாள்.

அன்றைய பெண்ணும் போர் முனைகளைச் சந்தித்தவள்தான். எதிரி குழுக்களைத் தாக்க, வேடடையாட - தானே ஆயுதங்களைக் கொண்டு சென்று தாக்குவாள், அந்தத் தாய்க்குப் பின்னால் தான் அவளது குழுவைச் சேர்ந்த பெணகளும், ஆண்களும் வருவார்கள், சண்டை செய்வார்கள், இறப்பைச் சந்திப்பார்கள், வெற்றி பெறுவார்கள்.

எலும்பாலும், கல்லாலும், மரத்தாலும், கொம்பாலும் செய்யப்பட்ட- விதம் விதமான கூரிய ஆயுதங்களால் பெண்கள் சண்டை போட்டார்கள். தமக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய எதிரிகளைத் தேடி, தேடித் தாக்கி அழித்தார்கள்.

கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் பெண்கள் சாம்ராஜ்யமாகவே இருந்தது. அந்தக் காலத்தில்தான் சமூகம் முழுவதும் ஒரே குடும்ப மாகவிருந்தது என ஆய்வாளர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இதனை மெய்ப்பிப்பது போல அகழ்வாராய்வின்போது, மிகப் பழமையான காலத்து வரலாற்று ஆவணங்களில் சக்தி வழிபாட்டுமுறை இருந்து வந்துள்ளதைச் சுட்டுகின்றனர். உலகில் சரிபாதியினர் பெண்கள். இந்தச் சரிபாதித் தொகையான பெண்கள் - போராட்டத்தில் பங்குபெறாது, எமது தேசத்தின் விடுதலை சாத்தியப்படாது, சரிபாதியினரான பெண்களுக்கு விடுதலையின்றி, எமது தேசவிடுதலை முழுமை பெறாது என்பது தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்தாகும்.

அடக்கு முறையின் வடிவமாகப் பெண்ணை ஆளாக்கியுள்ள நமது சமூகம் - அந்தத் தளையை அறுக்க முன்வரவில்லை. பெண் ஒடுக்குமுறைக் கருத்துக்கள் இன்னமும் பலமான நிலையில் பேசப்படுகிறது. அவ்வாறான சமூகக் கட்டமைப்பு எழுதப்படாத வாக்கியமாக நிலைத்து நிற்கிறது.

சாதி வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் புரை யோடிப்போயிருந்த சூழ்நிலையில் - பெண்கள் அதிலே புதையுண்டு போனதில் ஆச்சரியப்படு வதற்கு ஒன்றுமில்லை.

தமிழரது வாழ்வில் அடிமைத்தனம் என்பது பல ஆண்டுகளாக நீடித்துள்ளது. அந்நியப் படை யெடுப்புக்களால் தமிழரது கலாசாரம், பண்பாடு என்பன சிதையுண்டு போயுள்ளது.

தமிழர் வாழ்வில் பெண் மதிக்கப்பட்டு, அவளுக்குரிய கௌரவம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், ஆரியப் படைகளுக்குத் தமிழன் அஞ்சியோடவில்லை. வஞ்சகமாக ஆன்மீகத் தத்துவங்களைப் புகுத்தி, ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழ் நாடுகளை அடிபணிய வைத்தார்கள். அதுதான் தமிழ் மக்களின், தமிழ்ப் பெண்களின் வாழ்வுக்கு அஸ்தமனமாகவிருந்தது.

அவர்கள் போட்டவிதைதான் பெண்ணடிமை, சதனம், சாதிமுறை, குலதொழில் என்பனவாகும். இன்றுகூட இந்தியாவில் பெண்கள் படும் இழிவு நிலை ஏராளம். இந்திய ஆதிக்கம் ஈழத்திலும் நிலை கொண்டதால், ஈழப் பெண்களும் இது போன்ற அடக்குமுறைக்கு ஆளாகினர். இப்படிப்பட்ட சமூகக் கட்டமைப்புக்கள் இறுக்கமாகவிருந்த சமூகத்தில் இருந்துதான் - 2 ஆம் லெப் மாலதி உருவானாள். ஒரு விடுதலைப் போராட்டத்துக்கு வலுவூட்டப் பெண்களால் முடியும். அப்போது தான் போராட்டம் பலம்பெறும் என்ற மாலதியின் இலட்சிய தாகத்தைப் பெண்ணியம் தீர்த்துக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வித்தாக 2 ஆம் லெப் மாலதி விதைக்கப்பட்டாள்.

அமைந்த பொருளாதார உற்பத்தி முறையில் - எமது சமூகக் கட்டமைப்பு எழுதபபட்டிருந்தது. அது சுய சிந்தனைக்கு வரம்புகளை விதித்தது. பெண்கள் தாம் அடக்குமுறைக்குள் வாழ்கிறோம் என்பதை உணரவிடாது தடுத்தது. அத்தோடு எதிரியின் இன அழிப்புப் போர் என்று மில்லாதவாறு எம் மண்ணில் தீவிரமடைந்திருந்தது. அந்த நிலையில் அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்திப் பெண் விடுதலைக்கு வழிசமைப்பது பற்றி நாம் சிந்திக்க முடியாதிருந்தது.

எனவே, விடுதலைப் போராட்டத்தில் பெண்களையும் அணி சேர்ப்பதனூடாக, படிப்படியாக சமூக மாற்றத்தை ஏற்படுத்தி - பெண் விடுதலை யையும், தேசவிடுதலையையும் சாத்தியமாக்கலாம் என நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறுதான் எமது போராட்டத்தில் பெண்புலிகள் தோற்றம் பெற்று, இன்று எதிரியின் படை பலத்தைச் சிதைதது யுத்தத்தின் போக்கையே நிர்ணயிக்கின்ற பெரும் படையணிகளாக எழுந்து நிற்கிறார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மேற்குலகப் பெண்கள் பெரும் போராட்டங்களை நிகழ்த்தி, புரட்சிகளை நடாத்தி, விவாதங்களைப் புரிந்து, கருத்தமர்வுகளை மேற்கொண்டு, பெற்றெடுத்தவற்றைவிட - எமது ஈழத்துப்பெண் போராளிகள் மிகக் குறுகிய காலத்துக்குள் எமது பெண்களுக்குப் பெற்றுக்கொடுத்த உரிமைகளும், சுதந்திரமும் அளப்பரியவை. அத்தோடு சமூகத்திலே பெரும் புரட்சியை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

சமூகக் கருத்துலகில் புதிய பார்வையை

நிற்கிறார்கள். தீரந்தாலும், தியாகத்தாலும், விவேகத்தாலும் உலகப் பெண்களுக்கு வழிகாட்டியாக உயர்ந்து நிற்கி றாள் என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர்.

ஐம்பது வருடகால ஆக்கிரமிப்புக்கும், 30 வருட கால கொடிய போருக்கும் தமிழீழப் பெண்கள் முகம் கொடுத்து, தமது பெண்ணிய ஆற்றலால் அனைத்து தடைகளையும் அறுத்தெறிந்து வருகிறார்கள்.

தலைவர் பிரபாவின் காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் தம்மை வளர்த்தது மட்டுமன்றி, தமிழீழத் தேசத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து வருகிறார்கள்.

தமிழ்த்தேசிய உணர்வுகளை கட்டியெழுப்பி, புதிய பெண்ணெழுச்சிக்கு வித்திட்டுள்ளார்கள் அதிகாரப் போக்காலும், ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத வெறியாலும் தமிழர்களின் ஜனநாயக உரிமை நசுங்கியது. ஆனால், இளைய பெண்தலைமுறை சுதந்திரவேட்கை கொண்டு, விடுதலைக்காக ஆயுதக் கருவிகளை கையிலேந்தி, தீர்த்தமான, தீரமான வேட்டுக்களாலே இன்று ஜனநாயகம் மலர்ந்து மட்டுமல்ல, பெண்ணினத்தின் விடுதலையும் முழுமை பெற்றது. ஆண் - பெண் சமநிலை புத்துயிர் பெற்றுள்ளது.

மனித ஆளுமை - பால் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது.

ஒரு பெண் தன்கையில் விலங்கில்லை என நினைக்கிறாள். ஆனால், அவள் மனங்களில் விலங் கிடப்பட்டிருக்கிறது. மனம் எந்நேரமும் இருட்டாக இருக்கிறது. மனம் வெளிச்சத்துக்கு

இன்று தமிழீழப் பெண் போராளிகள் போர்க களத்தில் அளப்பெரும் தியாகங்களையும், சாதனை களையும் நிகழ்த்தி, உலகப் பெண்களுக்கு உன்னதமான எதிர்காலத்தைக் காட்டி நிற்கின்றனர்.

ஏற்கனவே பெண்ணுக்குக் கொடுத்திருந்த விம்பம் உடைக்கப்பட்டிருக்கிறது. பெண்களின் ஆற் றலை, பலத்தை, வல்லமையை நிருபிக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். தாங்கள் யாரெனபதைக் காட்டிநிற்கிறார்கள்.

ஈழத்தில் இன்று பெண்கள் விஸ்வருபமெடுத்து நிமிர்ந்து நிற்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் இணைந்த பெண்கள் சாதனை செய்தார்கள். இல்லாவிட்டால், அடுப்போடும், நெருப்போடும்தான் காலத்தைக் கழிக்கவேண்டும் என்பதை ஏனையோருக்குப் புரியவைத்துள்ளனர்.

ஆயிரமாயிரம் மாவீரர்கள் ஏற்றிவைத்த சுதந் திரச் சுடரில் - அகலத்தெரியும் அந்த விடுதலைப் பாதை வழியாகத் தலைவருக்கு உறுதுணையாக நின்று பெண் போராளிகள் போராடி வருவது, தமிழீழப் பெண்கள் பெருமைகொள்ள வேண்டிய விடயமாகும்.

அடக்கு முறைகளுக்கு அடிபணிந்து, அடிமைகளாக வாழ்வதைவிட - விடுதலைக்காக வேள்வியில் குதித்து, வீர மரணத்தைத் தழுவிக்கொள்ளப் பெண்கள் தயாராகவிருக்கிறார்கள் என்பது ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும்.

ஈழப்பெண் போராளிகளது அபாரமான போராற்றலையும், அவர்களது தீரத்தையும், தியாகத்தையும் உலகு நன்கறியும்.

பெண்ணா? நீ கடற்கரைக்குப் போகக் கூடாது எனத் தடுத்தார்கள். இன்று கடலிலே காவியம் படைக்கிறார்கள். கடல் அமைதியாக இருப்பதில்லை, சதா அசைந்துகொண்டேயிருக்கும். அதன் முதுகிற் சவாரி செய்து கொண்டு, சண்டை செய்வது மிகவும் கடினமானது. ஆனால், விடுதலைப்புலிப் பெண்போராளிகள் அந்தக் கீடலையே தம் காலடியில் போட்டுச் சாகசம் புரிகிறார்கள்.

அதுமட்டுமா? மகளிர் படையணிகள் இன்று பேராற்றல் கொண்ட மரபுவழிப் படையணிகளாகப் பரிணாமம் பெற்றுச் சிங்களப் படைகளுக்கு அச்சுறுத்தலாக எழுந்து நிற்கின்றன.

சர்வதேச நாட்டுப் போர்க்களங்களில் பெண் கள் போரில் ஈடுபடுகிறார்கள். ஆனால், அவர்கள் நேரடி யுத்தம் எதிலும் முகம்கொடுப்பதில்லை. மாறாக, களமருத்துவப் பணிகள், பின்தன் வேலைகளில் மட்டுமே ஈடுபடுகிறார்கள். ஆனால் இலங்கையின் வடக்கு - கிழக்குப் போர்முனைகளில் போரிடும் பெண்கள் கட்டளை அதிகாரியாக, அதிகாரிகளாக, தளபதிகளாகப் போரிடுபவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு, முன்னணிப் போரரங்குகளில் கனரக ஆயுதங்களை, சுடுகலன்களை இயக்கக்கூடிய கடும் பயிற்சி பெற்றவர்களாகவும், நிறைந்த அனுபவம் உள்ளவர்களாகவும் பெண்கள் உள்ளனர்.

அன்று எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான சமூக அநீதிகள் அதிகரித்திருந்தன. பெண் அடக்குமுறைக் கருத்துக்கள் பலமாக நிலவின. எமது சமூகமே சாதி, சமய வேறுபாடுகளால் ஆழமாகப் பிளவுபட்டு நின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக நிலச் சுவாந்தர் முறைமையையும், [illegible] ளையம். இயக்கமாகப் [illegible]

வளர்த்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஆணும், பெண்ணும் சமமான ஆற்றலகளுடனேயே படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உடற் கூற்றியல் நிபுணர்களது கூற்றுக்கு, பெண் புலிகளே உலகுக்கு உதாரணமாக வாழ்கிறார்கள் என, பெண்போராளிகள் பற்றித் தலைவர் பிரபா பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.

ஒக்ரோபர் 10 தமிழீழ பெண்கள் எழுச்சி நாள். 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளும் ஆகும். அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தமிழீழப் பெண்கள் இன்று தலை நிமிர்ந்து

வரவேண்டும். அதற்கிருக்கும் ஒரே வழி - சிறு வயதில் இருந்தே அறிவியல் ரீதியான முதிர்ச்சியை கொடுக்கவேண்டும். அப்போதுதான் ஒட்டுமொத்தமான முடிவை அவளால் எடுக்க முடியும்.

அந்த முடிவு சரியாகவிருக்கும்போது, தன்னை உணர்நது கொள்வாள். தன்னை உணர்ந்துகொண்டால், அனைத்திலும் வெற்றி கொள்வாள்.

இதுதான் உலகியல் தத்துவம். எங்களுக்குள்ளே அறிவு உல கத்தைத் தேடுவோம். அதுவே வாழ்வுக்கு வழி வகுக்கும்.

# சர்வதேச உளநல நாள் ஒக்ரோபர் -10

உலக ஸ்தாபனம் ஒக்ரோபர் 10 உளநல நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளது. இந்த நாளை முன்னெடுத்து சுகவாழ்வு நிலையம், உளநலம் சார்ந்த விழிப்புணர்வுகளை (சிறுவர் பெண்கள் உட்பட அனைவருக்கும்) கடந்த நாட்களாக நடாத்தி வருகிறது.

உளநல நாளை ஒட்டி சிறுவர், பெண்களுக்கான ஒன்றுகூடல் மாநாடு ஒக்ரோபர் 9 ம் திகதி சனிக்கிழமை 5 இடங்களில் நடைபெறவுள்ளன. உளநல சேவைகளை தெல்லிப்பளை வைத்தியசாலையும், யாழ். போதனா வைத்தியசாலை உளநல பிரிவும், பல்கலைக்கழக உளநல மருத்தவத்துறை, சாந்திகம், அகவொளி இன்று உளநலம் பற்றி செயலாற்றும் திறனுடைய நிலையங்களாக யாழ். நகரில் வளர்ந்து வருகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்ற 'உளநல சேவைகள' மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். உளநலம் என்பது தனித்து நோக்கப்பட முடியாதது. ஒரு பெரிய பன்முகப்பட்ட பார்வைக்குள் ஆட்பட்டது. உடல், குடும்ப, சமூக, ஆன்மீக ரீதியில் தொடர்புடைய ஒரு பார்வையாகக் கொண்டது.

உளவளத்துறை நமது பிரதேசத்தில் வளர்ந்த வரலாற்றைப் பார்க்குமிடத்து, 1987 ஆம் ஆண்டைத் தொடர்ந்து நடைப்பெற்ற போரால் உண்டான - உளத்தாக்கங்களை ஈடு செய்யும் முகமாக, யாழ்ப்பாணத்தில் ஒரு உளவளத்துறை நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையின்படி, 1988 ஆம் ஆண்டு யாழ் மருத்துவபீட வளாகம் உளவளத்துறை சிகிச்சையை வழங்கியது. பின்னர் சாந்திகம், சுகவாழ்வு நிலையம், சிறுவர் பெண்களை உள சமூக பிரச்சினைகளிலிருந்து மேம்பாடடையச் செய்தது. இன்று பல இடங்களில் துணைநாடி வருபவர்களுக்கு தஞ்சம் அளிக்கிறது.

உளவியலானது வளர்ந்து வரும் ஒரு கலை யும், விஞ்ஞானமுமாகும். உளவியல் உதவியை நாடுபவர்களை நாம் நல்ல நிலைக்கு இட்டுச் செல்வது தான் நம் நோக்கு.

எத்தனையோ மக்கள் உடல் ரீதியில் பாதிப்படைந்தாலும், உளரீதியிலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களை உரிய இடத்தில் தட்டிக்கொடுத்து, எதிர்காலத்தில் [illegible] கொடுத்து விடுகிறோம்.

பெண்கள், சிறுவர், கட்டிளம் பருவத்தினர், துணை இழந்தவர்கள், கணவனால் கைவிடப் பட்டோர் ,கணவனின் உதவி அற்றோர், இளைஞர்கள், திருமணமானவர்கள், மணம் புரியாதவர்கள், முதியவர்கள்.

பொதுவாக சில சமூக, சமய, கலாசார நிகழ வுகளை ஒட்டிய பிரச்சினைகள் உண்டாவது எப்படி எனில் - மனிதனின் உடல், மனம், சமூக நிகழ்வுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய சுற்று வட்டமாகும். இவற்றுக்கிடையில் நெருங்கிய தொடர்புடைய - மனதைத் தளரச் செய்யும் சில சமூக நிகழ்வுகள் வருமாறு.

உத்தியோக ஓய்வின்மை
இறப்புக்கள்
இழப்புக்கள்
பொருளாதாரக் கஷ்டம்
இடப்பெயர்வு
பிரிவுகள்
குடும்பத்தில் ஏற்ற இறக்கங்கள்

மேற்கூறிய குறைகளில் ஏதோ ஒன்று ஒரு குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ நிலவி வருகிறது.

இவ்வேளை, இவர்களுக்கு உளவளத் துணை நிச்சயம் தேவைப்படுகிறது. அவ்வேளை அவர்கள் எம்மை அணுகுகிறார்கள். நாமும் உளவளத்துணைச் சிகிச்சை முறைகளை மேற்கொள்கிறோம். கூடியளவு 100%, 90% திருப்தியை அளிக் கிறது. உளப் பிரச்சினையால் மீண்டோர் மீண்டும் எம்மை நாடி குடும்ப உறவினராக இன்றும் இருக்கிறார்கள்.

பெண்களைப் பொறுத்தமட்டில், இழப்பு என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்கள். பிரிவு, இழப்பு, நெருக்கீடு, தற்கொலைக்கு இட்டுச் செல்லும். சிலர் இந்தச் சுற்றுவட்டத்தால் தற்கொலை முயற்சிக்கும் சென்றுள்ளார்கள். இவர்களை அணுகி, இவர்களுக்குரிய குடும்ப உளவளத்துணையையும் வழங்கி வருகிறோம்.

பணமின்றி இலவசமாக எங்கும், எவ்விடத்திலும் மருந்து எடுத்துக்கொள்ளும் ஒரு சிகிச்சையாக இந்த உளவளத்துணை வளர்ந்து வருகிறது.

ஆகவேதான் புயப்புயலை நீக்கி, அகப் புயலை மனதிலே தொட்டு, ஆழ்மனம் ஊடாக பலமான காற்றை வீசவைத்துக் கொண்டிருக்கிறார்கள் யாழ். உளவள வைத்திய சாலைகள், உளவளதுணை நிலையங்கள். எனவே, எல்லோரும் விழிப்பாக இருங்கள். இன்று உளநல நாளாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தோர் தொகை 33 ஆக உயர்வு



எகிப்திய ஹோட்டலில் இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்தும் தமது மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் பத்துப் பேர் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்டவேளை இந்தக் ஹோட்டலில் 900 விருந்தினர்கள் இருந்ததாகவும், இவர்களில் அரைவாசிக்கு மேல் இஸ்ரேலியர்களெனவும், 250 பேர் ரஷ்யர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இஸ்ரேலியர்களாவர். அத்துடன் 5 எகிப்தியர்களும், ஒரு ரஷ்யரும் அடங்குகின்றனர்.

தமது நாட்டுப் பிரஜைகள் பன்னிருவர் விடுமுறையைக் கழிப்பதற்காகக் ஹோட்டலுக்குச் சென்றதாகவும், அவர்கள் தற்போது காணாமற் போயுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்தது.

அத்துடன் இரண்டு இத்தாலிய கன்னியாஸ்திரிகளும் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் பலரைத் தாம் இனங்கண்டுள்ளதாக எகிப்திய விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 13 பேர் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்கள் மற்றும் தாக்குதலால் சின்னாபின்னமான இடிபாடுகளை அகற்ற இரண்டிற்கு மேற்பட்ட நாட்கள் தேவையென மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள இழப்புக்களை முழுமையாக வெளியிட சில நாட்கள் செல்லுமென இஸ்ரேல் இராணுவ அதிகாரியான கேணல் ஜிடியோன் பார் - ஒன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலையடுத்து ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் எகிப்திலிருந்து தமது சொந்த நாட்டுக்குத் திரும்பியுள்ளனர். சகல இஸ்ரேல் பிரஜைகளையும் உடனடியாக நாடு திரும்புமாறு இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் அமெரிக்கா மற்றும் ஜேர்மன் நாடுகளும் தமது பிரஜைகள் எகிப்துக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு எச்சரித்துள்ளன.

# பங்களாதேஷ் விமான விபத்து அமைச்சர் உட்பட 79 பேர் காயம்



பங்களாதேஷில் பிமான் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரு விமானம் பயணிகளை ஏற்றிக்கொண்டு அங்குள்ள சில்ஹெட் பகுதிக்கு வந்துகொண்டிருந்தது. சில்ஹெட் சர்வதேச விமான நிலையத்தில், விமானி அந்த விமானத்தைத் தரையிறக்கினார்.

ஓடுபாதையில் இறங்கியதும் அந்த விமானம் தரையில் பலமாக மோதியது. தட்டுத்தடுமாறியபடி அந்த விமானம் ஓடுபாதையை விட்டுவிலகி சிறிது தூரம் சென்றது. விமானம் பலமாக மோதியதில் விமானத்தின் முன்பகுதி நொருங்கியது.

அந்த விமானத்தில் 85 பயணிகள் இருந்தனர். விமானம் தரையில் பயங்கரமாக மோதியதில் விமானத்தில் இருந்த பயணிகள் 79 பேர் காயமடைந்தனர். விமானத்தின் சிதைந்த பகுதியில் அவர்கள் சிக்கிக் கொண்டு தவித்தனர்.

காயமடைந்தவர்களில் பங்களாதேஷ் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயரதிகாரிகள் ஆகியோரும் அடங்குவர்.

விமானத்தின் சிதைந்த பகுதியில் சிக்கித் தவித்த அவர்களை 6 மணிநேரப் போராட்டத்தின்பின் மீட்புப் படையினர் மீட்டனர்.

படுகாயத்துடன் அவர்கள் டாக்கா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

பங்களாதேஷில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. விமான நிலையத்தின் ஓடு பாதையிலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனால், விமானம் தரையிறங்கும்போது வழுக்கிச் சென்று மோதியதாகக் கூறப்படுகிறது.

சதி வேலையும் இந்த விபத்துக்குக் காரணமாக இருக்குமா என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

# தென்கொரிய படையினரின் வாள் சண்டை நடனம்



வடகொரியா மூலம் தென்கொரியாவுக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. தீவிரவாதிகளின் நடவடிக்கையும் தென்கொரியாவில் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அமெரிக்கப் படை தென்கொரிய இராணுவத்துக்குப் பயிற்சியளித்து வந்தது.

இந்தக் கூட்டு இராணுவ பயிற்சி இப்போது முடிவடைந்துவிட்டது. அமெரிக்க இராணுவம் தென்கொரியாவில் இருந்து வாபஸ்பெற முடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து தென்கொரிய நாடுகளின் இராணுவத்தினர் கூட்டாகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். சியோல் நகரிலுள்ள இராணுவ முகாமில் தென்கொரிய வீரர்கள் பாரம்பரிய உடையணிந்து வாள் சுழற்றியபடி வித்தியாசமான நடனம் ஆடிய காட்சி கண்ணைக் கவர்ந்தது.

அமெரிக்க வீரர்கள் கொண்டு வந்த நவீன ஆயுதங்களையும், ஹெலிகொப்ரர்களையும் தென்கொரியாவிலேயே விட்டுச்செல்ல அமெரிக்கா சம்மதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் காஸாவில் 5 பலஸ்தீனர் உயிரிழப்பு


காஸாப் பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் பலஸ்தீனப் பொலிஸார் இருவர் உட்பட ஐவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்தனர்.

காஸாப் பகுதியிலுள்ள ஜபாலியா அகதிமுகாம் பிரதேசத்தில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதேவேளை, காஸாப் பிரதேசதின் வடக்குப் பகுதி நகரமான பீற் கனலினில் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு ஹமாஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக றொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் தம்மை நோக்கி றொக்கட் தாக்குதல்களை நடத்தியதாகவும், அதனையடுத்துத் தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலிலேயே இரு ஹமாஸ் உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கான்யுனிஸ் முகாம் பகுதியில் இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இரு பலஸ்தீனப் பொலிஸார் கொல்லப்பட்டனர். ஆனால், தாம பலஸ்தீனத் தீவிரவாதிகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் இரு தீவிரவாதிகளே கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.



இதேவேளை, நேற்றுமுன்தினம் இஸ்ரேலிய இராணுவத்தினரின் தாக்குதலில் ஒரு இளம்பெண் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

காஸாப் பிரதேசத்தில் பலஸ்தீன தீவிரவாதிகளது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக கடந்த ஒன்பது நாட்களாக இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளில் இதுவரையில் 80 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த நான்கு வருடங்களில் இஸ்ரேலிய இராணுவம் காஸாப் பிரதேசத்தில் மேற்கொண்ட மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.




# பெற்றோல் உற்பத்தியை அதிகரிக்க எண்ணெய் வள நாடுகள் மறுப்பு

பெற்றோல் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் எதுவும் இல்லையென, பெற்றோல் ஏற்றுமதி நாடுகள் அமைப்பின் தலைவரும், இந்தோனேஷிய எரிபொருள் அமைச்சருமான பூர்ணோமோ ஹஸ்ஜியான் டோரோ கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

"பெற்றோல் விலை ஒரு பீப்பாய் 53 அமெரிக்க டொலராக உள்ளது. இது அதிகம்தான். இந்த உயர்வுக்குக் காரணம் பெற்றோல் தட்டுப்பாடு இல்லை. அதனால், உற்பத்தியை அதிகரிக்கமாட்டோம்"

அடுத்த ஆண்டு தொடக்கத்தில், ஒரு பீப்பாய் பெற்றோல் 50 அமெரிக்க டொலருக்குக் குறைவாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஈராக்கின் தலைநகரில் வைத்து கடத்தப்பட்ட பிரிட்டன் பிரஜை படுகொலை செய்யப்பட்டார்



ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தை வாபஸ் பெறக்கோரி சதாம் ஹுசைனின் ஆதரவுத் தீவிரவாதிகள், அமெரிக்கப் படையினர் மீது திடீர் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

அத்துடன் அமெரிக்கப் படைகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் வெளிநாட்டவர்களையும் தீவிரவாதிகள் கடத்திச்சென்று கொலை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திலிருந்து இங்கிலாந்தைச் சேர்ந்த கென்னத் பிக்லே (வயது 62) மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு பேரை தீவிரவாதிகள் கடந்த மாதம் 16 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

பணயக் கைதி கென்னத் பிக்லேயை ஈராக்கில் தீவிரவாதிகள் கொலை செய்ததாக அபுதாபி தொலைக்காட்சி நேற்று முன்தினம் தெரிவித்தது. பாக்தாத்தில் தகவலறிந்த வட்டாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தச் செய்தி வெளியிடப்பட்டதாக ஐக்கிய அரபு எமிரேட்சிலுள்ள அபுதாபி தொலைக்காட்சி தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்தது.

ஆனால், கென்னத் கொலை செய்யப்பட்டது தொடர்பாக வீடியோப் பிரதியேதும் கிடைத்ததா? கென்னத் எப்போது கொலை செய்யப்பட்டார் போன்ற தகவலை அபுதாபி தொலைக்காட்சி தெரிவிக்கவில்லை.

அதேவேளை, லண்டனில் பிரதமர் ரொனி பிளேயரின் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் கூறும்போது - "கென்னத் கொலை குறித்த தகவல்கள் எங்களுக்குத் தெரியும். ஆனால், இந்தத் தகவலை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரம் ஏதும் இல்லை" என்றார்.

# பாகிஸ்தான் இராணுவ தளபதியாக முஷாரப் நீடிக்கப் புதிய சட்டம்!



பாகிஸ்தான் அதிபராகவும் இராணுவத் தளபதியாகவும் முஷாரப் தொடர்ந்து நீடிக்க புதிய சட்டம் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் முஷாரப் அதிபராக உள்ளார். அவர் இராணுவத் தளபதி பொறுப்பைச் சேர்த்துக் கவனிக்க முடிவு செய்தார். இதற்கு எந்தவித சட்டச் சிக்கலும் வராமலிருக்கப் புதிய சட்ட மசோதா ஒன்றைத் தாக்கல் செய்ய பாகிஸ்தான் அரசு முடிவு செய்தது. அதன்படி புதிய சட்டத்தை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் முகமது வாசி சபார் தாக்கல் செய்துள்ளார்.

நாட்டின் அதிபராக இருப்பவர் அந்தப் பதவியுடன் மற்ற ஒரு பொறுப்பையும் சேர்த்துக் கவனிக்கலாம் என அந்தச் சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பாகிஸ்தான் அரசியல் சட்டத்தில் 63 ஆவது பிரிவு இடமளிக்கிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 342 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோரின் ஆதரவு முஷாரப்புக்கு உள்ளது. எனவே, இந்தச் சட்டம் எளிதில் நிறைவேற்றப்படும். இதன்மூலம் எந்தத் தடங்கலும் இன்றி முஷாரப் அதிபர் மற்றும் இராணுவ தளபதி பொறுப்புக்களைத் தொடர்ந்து கவனிப் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அமெரிக்க செனட்டர் கோரிக்கை

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கவேண்டுமென, அமெரிக்கச் சட்டசபை உறுப்பினரும் கிழக்காசிய மற்றும் பசுபிக் பிராந்திய நாடுகளின் சர்வதேச உறவுகள் உபகுழுவின் தலைவருமான ஜேம்ஸ் ஏ லீச் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்க முடியாதுள்ளமைக்கான காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலான கோரிக்கைகளே எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டம், ஒழுங்கு, வரி அறவிடுதல், இராணுவக் கட்டமைப்பு, வெளிநாட்டு நிதி நிர்வாகம் போன்ற மேலதிக அதிகாரங்களைக் கோரி நிற்பதாகவும், இவை தற்போது மத்திய அரசாங்கத்தின் கீழ் இருப்பதாகவும் தெரிவித்த ஜேம்ஸ், இதனாலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக இலங்கையில் அதிகரித்துள்ள அரசியல் வன்முறைகள் குறித்துக் கவலை அடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலில் வீரச்சாவடைந்த பெண் போராளி

# மாலதி நினைவு நிகழ்வு இன்று கோப்பாயில்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல்முறையாக வீரச்சாவடைந்த பெண் போராளி 2 ஆம் லெப். மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வும், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளும் இன்று மாலை 5 மணிக்கு கோப்பாய் கந்தசுவாமி ஆலய முன்றலில் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக கைதடி வீதியில் அமைந்துள்ள மாலதியின் நினைவாலயத்திலிருந்து மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி, பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக கோப்பாய் கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கு பொதுச்சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல் ஆகியன இடம்பெறும். மாலதியின் நினைவுநாள் நினைவுரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் யாழ்மாவட்ட மாலதி நினைவுநாள் ஏற்பாட்டுக்குழ ஒழுங்கு செய்துள்ளது.

# காஞ்சிரங்குடா படுகொலை நினைவுதினம் அனுஷ்டிப்பு!

(மட்டக்களப்பு)

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படையினரால் 2002 ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட, ஏழு நாட்டுப் பற்றாளர்களினதும் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் அம்பாறை திருக்கோவிலில் அமைந்துள்ள அவர்களது நினைவுத் தூபியில் நேற்று இடம்பெற்றது.

நேற்றுக்காலை 9 மணியளவில் உடும்பன்குள கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலாகரன் தலைமையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் சங்கரி பொதுச்சுடரை ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஏற்றினார்.

நினைவுத் தூபிகளுக்கான மலர் மாலைகளை அணிவித்து ஈகச்சுடரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன், தமிழர் மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் ந.தர்மலிங்கம் உட்பட உறவினர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளை குயிலின்பன், பத்மநாதன் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வு நடந்த ஒரு மணி நேரத்திற்கு திருக்கோவில் பிரதேசத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன் பிரதான சந்திகளில் சோக இசைகளும் ஒலி பெருக்கிகள் மூலம் இசைக்கப்பட்டன. (07)

## சுவிஸ்....

லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் -

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் அதனை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள நெருக்கடிநிலை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாட்டினதும் வர்த்தக, பொருளாதார உறவுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைசசு வெளியிட்ட செய்திக்குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தற்போதைய நாட்டு நிலமைகள் குறித்து சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் ஆராய்வார். நாளை ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுக்களை நடத்துவார் என்று இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதரகத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த சந்திப்புக்களின் பின்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நர்டாளுமன்ற உறுப்பினர்களையும் இவர் சந்திப்பார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## தமிழ்.....

பட்டது. நிகழ்வினை கலாநிதி சொக்கன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியில் நூற்றுக் கணக்கான ஈழத்து இலக்கிய நூல்கள் பார்வைக்காகவும் விற்பனைக் காகவும் வைக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து டாக்டர் கிறீன் அரங்கில் ஆய்வுரை நடைபெற்றது. இந்த ஆய்வுரைக்கு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தலைவர் கலாநிதி சி.மௌன குரு தலைமை தாங்கினார்.

முதல் நாள் ஆய்வரங்கில் மேல் நாட்டார் வருகைக்கு முன்னர் நிலவிய கல்விசார் அறிவியல், அறிவிலக்கிய பாரம்பரியம் என்ற ஆய்வுக் கட்டுரையை கலாநிதி ரகுவரனும், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களில் கல்விசார், அறிவியல் சார் நூல்கள் என்றதலைப்பில் ஈஸ்வர நாதபிள்ளை குமரனும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

நேற்று ஆரம்பமான முதலாம் நாள் நிகழ்வில் பெருமளவான மாணவர்களும் கல்விசார் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

## ஒஸ்ரிய அரச அதிகாரிகளுடன்...

மீண்டும் முன்னெடுத்துச் செல்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் காட்டி வரும் அக்கறையை தான் பாராட்டுவதாகவும் ஒஸ்ரிய வெளிவிவகார அலுவல்கள் சமஷ்டி அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் நீண்டகால யுத்தத்தைச் சந்தித்த தமிழ்மக்களது தற்போதைய மனிதாபிமானத் தேவைகளைத் தாம் புரிந்துகொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்போது கருத்துத் தெரிவித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் தற்போதுள்ள சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி அதன்மூலம் சுமுகமான ஓர் தீர்வினை எட்டவே தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புவதாகத் தெரிவித்தார்.

மேலும் தமிழ்மக்களது மனதில் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஏமாற்றங்கள் ஏற்பட முன்னர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது அவசியம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இந்தச் சந்திப்பில் ஒஸ்ரிய அரசின் கொள்கை மதிப்பீட்டுத் திணைகளத்தைச் சேர்ந்த கிளஸ்ரீ சின்னர், வெளிநாட்டலுவல்களுக்கான சமஷ்டி அமைப்பினைச் சேர்ந்த மைக் பீற்றர் ஸ்ரோரர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேசமயம் சமாதானம் மற்றும் முரண்பாட்டுத்தீர்வுகளுக்கான ஒஸ்ரிய கல்வி மையத்தினால் நடத்தப்பட்ட கருத்தரங்கிலும் புலிகளின் ஆய்வுக் குழுவினரும் கலந்துகொண்டனர்.

## அரசாங்கம்....

திகதி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை முன்வைத்திருந்தனர்.

இதனடிப்படையில் பேச்சுக்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி உடன்பாடு தெரிவித்திருந்தபோதும் பின்னர் நடந்த ஆட்சிமாற்றத்தால் பேச்சுக்கள் தடைப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பதிலாக - அரசாங்கத்தரப்பு மாற்றுயோசனையைச் சமர்ப்பிக்கவிருப்பதாக அறிவித்திருந்தது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனையையே விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அடுத்துவரும் வாரங்களில இலங்கை வருவாரென எதிர்பார்க்கப்படும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மூலம் இந்த இடைக்கால நிர்வாக மாற்று யோசனையை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்க அரசாங்கம் முயற்சித்துவருவதாகத் தெரியவருகிறது. (01)

## ஜனாதிபதி....

எனக்கும் ஜனாதிபதிக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை. அவர் எமது கட்சியில் முதலாம் நபர் நான் அவருக்கு அடுத்த நிலையிலுள்ளேன். ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் 2005 ஆண்டுடன் நிறைவடைகிறது. இதில் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக இருக்க விரும்பின் அதற்கு நான் உடன்படுவேன்.

இதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினால் நாம் அரசியலமைப்பையும் மாற்றத் தயாராக உள்ளோம்.

நாம் ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்ட ஒரு நாடு. ஆனால் பாகிஸ்தானுக்கும் எமக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எமது ஆட்சி முறையின்படி ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்குமிடையில் அதிகாரம் உள்ளது. இந்த அமைச்சர்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள். இவர்கள் தேர்தல் மூலமே தெரிவு செய்யப்படுபவர்கள்.

ஜனாதிபதி முறைமை என்பது அவரே நிறைவேற்று அதிகாரம் முழுவதையும் வைத்திருப்பார். ஆனால் நாடாளுமன்றின் அனுமதி இல்லாமல் ஜனாதிபதியால் எந்தவொரு சட்டத் திருத்தத்தையோ அல்லது விதிகளையோ நிறைவேற்றமுடியாது. எனவே நாம் நாடாளுமன்றில் மிகப் பலமாக உள்ளோம். எனவே நாடாளுமன்றம்தான் உயர்ந்தது.

நாம் தற்போதைய இந்த நடைமுறையை மாற்றி அமைக்க உத்தேசித்துள்ளோம். ஆனால் துரதிஷ்டவசமாக நாடாளுமன்றில் பெரும்பான்மையை நாம் கொண்டிருக்கவில்லை. எனவே ஜனாதிபதி முறையை ஒழிப்பதறகு எமக்கு போதிய ஆதரவு நாடாளுமன்றில் இல்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நோர்வே அனுசரணையாளராக கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து வருகிறது. ஆனால் அவர்கள் இன்னமும் இறுதித் தீர்விற்கு வரவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ளனர். பேச்சுவார்த்தை தொடர்கிறது. சமாதானப் பேச்சவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் நிச்சயமாக வெளிப்படையான நிலையில் பங்கேற்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்தின் திட்டங்களை ஏற்கவில்லை என்பது பிழையான கருத்தாகும். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே எம்மிடமிருந்து ஒரு திட்டத்தை பெற்றுள்ளனர். அத்துடன் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாரெனவும் தகவலை அனுப்பியுள்ளனர்.

அத்துடன் அனைத்துக் கட்சிகளுடனும் நாம் வட்டமேசை கலந்துரையாடலை நடத்திவருகின்றோம். இதன்மூலம் எமது சகல பிரச்சனைகளுக்கும் இறுதித் தீர்வு காணப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போராளியை சுட்டுக்கொன்று...

வர் படுகாயமடைந்து அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போராளி ஜுட் அக்கரைப்பற்று நகரில் வாகன உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்துவிட்டு, தம்பிலுவிலுள்ள தமது அரசியற்துறை அலுவலகத்துக்கு திரும்புவதற்காக தனியார் வாகனமொன்றில் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்தகால யுத்தத்தில் தனது கையை இழந்த, அங்கவீனரான மேறபடி அரசியற்துறைப் போராளி மீது கைத்துப்பாக்கி மற்றும் கிரனேட்டுக்களுடன் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அந்தச் சமயம் அப்பகுதியால் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் கொலையாளிகளை அடையாளம் கண்டு துரத்திச்சென்ற சமயம் ஒருவர் பதுரியா பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றிற்குள் ஓடிப்போய் ஒளிந்தார்.

அந்த நபரை மடக்கிக் கைது செய்யமுறபட்டபோது, மேற்படி நபர் அதிரடிப்படையினர் மீது கைக்குண்டை வீச எத்தனித்தபோதே, விசேட அதிரடிப் படையினர் கட்டிலுக்குக் கீழே மறைந்திருந்த இவரைச் சுட்டுக் கொன்றனர்.

அந்தப் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலை மேற்கொண்டபோதிலும், இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட இரண்டாவது நபர் கைது செய்யப்படவில்லை.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது போராளி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு தேசவிரோத சக்தியான கருணா அணியே பொறுப்பு என, விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் குற்றம் சுமத்தியுள்ளார்.

அக்கரைப்பற்று நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும், பொது மக்களும் விசேட அதிரடிப்படையினரால் சோதனையிடப்பட்ட பின்னரே நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

அப்படியிருந்தும் இப்படியான சம்பவமொன்று இடம்பெற்றிருப்பதென்றால், கொலையாளிகளுக்கு இராணுவத்தின் உதவி இருப்பது தெளிவாகின்றது எனவும் தெரிவித்துள்ளதோடு, இத்தகைய நிலைமை நீடிக்குமானால் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு பாரதூரமான விளைவு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெண்களின் ஆளுமையை....

விடுதலை நெருப்பு வீர காவியமான புனிதநாள். ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்த்திக் கொள்ளக் கூடியளவு தமிழ்ச்சமூகத்திடம் புரட்சியை நிலைநாட்டும் எழுச்சிநாள்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி - ஆண், பெண் முன்னேற்றத்திலேயே தங்கி நிற்கின்றது என்ற யதார்த்தத்தை புறந்தள்ளி, பெண்கள் மீது விதிக்கப்படுகின்ற தடைகள் எவ்வாறு ஒரு ஆரோக்கியமான சமூகத்தின் தலைமுறையை தோற்றுவிக்கும் என்பது எல்லோரும் உணரப்படவேண்டிய உண்மை.

இதனை வெளித்தெரியும் தோற்றப்பாடுகளை மாற்றிப் பயனில்லை. இது ஒரு சமூக விழிப்புணர்வு, கல்வி, பொருளாதாரம் என்பவற்றுக்கு அப்பால் எம்மனங்கள் எங்கள் எதிர்கால நம்பிக்கையில் இதன் மாற்றம் பதியப்படவேண்டும். எமது சமூகத்தின் அடிப்படைக் கட்டுமானங்களில் இதன் மாற்றம் துலங்கவேண்டும்.

விடுதலைப் போராட்டம் இந்த மாற்றத்தை படிப்படியாக வெளிக் கொணர்ந்திருக்கிறது. எமது தேசியத் தலைவரின் சிந்தனையும் அவரது வழிகாட்டலும் எமது வாழ்வியலில் பாரிய மாற்றத்தை விதைத்திருக்கிறது. இதன்மூலம் வரலாறு காணாத பெண்களின் புதிய பக்கம் ஒன்று எம்முன்னால் விரிந்து நிற்கின்றது. இது ஒரு குறிப்பிட்ட காலத்திலிருந்து பின்நோக்கிப் பார்க்கின்றபோது இந்த மாற்றம் வியப்படைய வைப்பதாயினும் சமூகத்தில் எமது விடுதலைக்கான தடைகள் நிறையவே இருக்கின்றன. அவை சமூகத்தின் ஒவ்வொரு தளத்திலும் வேறுபட்ட தன்மையினதாய் இறுகப்பற்றியுள்ளன.

பெண்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியுள்ளது. அதன் மாற்றம் ஒரு புதிய தலைமுறையின் ஒளிமயமான எதிர்காலத்தில் தங்கியுள்ளது. இதனை எமது விடுதலைப் போராட்டம் சாத்தியமாக்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் சமூகத்தின் மத்தியில் பற்றிப்படர்ந்துள்ளது. இந்தப் புரட்சிகரமான மாற்றங்கள் உருவாக்குவதற்கான புறச்சூழலும் மிகவும் முக்கியமானது. அதனை நிவர்த்திசெய்வதாக விடுதலைப் புலிப் பெண் போராளிகளின் அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அமைந்துள்ளன.

எனவே இந்த முன்மாதிரியினை தமிழ்ச் சமூகம் பின்பற்றி பழமைவாத இருட்டிலிருந்து வெளியேவந்து தன்னம்பிக்கையுடன் தனித்து தீர்மானம் எடுக்கின்ற ஆளுமையுடன் மிளிர வேண்டும். மாலதி பற்றவைத்த தீப்பொறி பெரு நெருப்பாகி, தமிழ்ச் சமூகப் பெண்களைப் பற்றியிருந்த தழைகளை எரித்துச் சாம்பலாக்கி அவர்களின் அறிவு வளர்ச்சியை சுடரச்செய்யும். அதற்கான வேலைத் திட்டங்களே எமது சமூகப் பெண்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கிராம, பிரதேச, மாவட்ட ரீதியாக செயற்படும் மகளிர் அமைப்புக்கள் பலம்பெறவேண்டும். கிராமத்தின், பிரதேசத்தின், மாவட்டத்தின், தேசத்தின் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்ற முக்கிய சக்தியாக வெளிப்படவேண்டும்.

எனவே பெண்கள் தமது அறிவாற்றலை மேம்படுத்திக்கொள்வதுடன் அந்த ஆளுமையை சமூகத்திற்கும் விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதே மிக முக்கியமான அம்சம். இதனையே இந்த தமிழீழ பெண்கள் நாளின் எழுச்சிப் பிரகடனமாக வரித்துக்கொள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Compaq PIII கணனிகள் விற்பனைக்குண்டு**

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள் (Tower Model) 800MHz/550MHz, 128 Mb RAM, 10GB Hard Disk, CD ROM மல்டிமீடியா மற்றும் 17" Color Monitor உடன் அதிசயத்தக்க விலையில்விற்பனைக்குண்டு.

- புதிய P4 கணனிகள் மற்றும் புதிய பழைய உதிரிப் பாகங்கள் கொழும்பு விலையில்
- குறைந்த இருப்புக்களே கைவசம்
- ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்

க.உதயகுமார், சுகிர்த வாசா, கும்பிளாவளை, அளவெட்டி.
தொடர்பு : 0776093477 / 0712509228

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org